# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

தமிழ் மாத இதழ்

| | | | |
|---|---|---|---|
| மலர் : 9 | இதழ் : 4 | ஜனவரி : 2025 | ரூ.20/- |
| Volume : 9 | Issue : 4 | January : 2025 | Rs.20/- |


## பாண்டிச்சேரி சிறப்பிதழ்



# SHRI MAHA MERU MANDALI TRUST

81/1, Mannappa Street, Kottur, Chennai - 600 085.





2014-ம் ஆண்டு முதல் வேதபாரதியின் வளர்ச்சிக்கு வித்திட்ட ஸ்ரீ மஹாமேரு மண்டலி குருஜி அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறோம். முதன் முதலில் வேதபாரதி செய்திகள் மாத இதழ் வண்ணக் கலரில் வர வேண்டும் என்றும், அதிக பக்கங்களுடன், இதழ் அதிக உறுப்பினர்களுக்கும் சென்றுசேர வேண்டும் என்ற குருஜியின் ஸங்கல்பம் நிறைவேறி 11 ஆண்டுகளாக தொடர்கிறது. வேதபாரதியின் வளர்ச்சிக்கும் சேவைக்கும், ஸ்ரீமஹா மேரு மண்டலி குருஜியின் ஆசீர்வாதங்கள் என்றும் வேண்டும்.

என்றும் பணிவுடன்
வேதபாரதி குழுவினர்

## பாண்டிச்சேரி வேதபாரதியின் புதிய நிர்வாகிகள் குழு




## ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு புதுவை நகரத்தின் கலைநிகழ்ச்சிகளுடன் கூடிய மார்கழி பஜனை






# மார்கழி பஜனை - பாண்டிச்சேரி











# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 66

**யோ தேவ: ஸவிதாஸ்மாகம் தியோ தர்மாதி கோசரா:/**

**ப்ரோயேத் தஸ்ய யத்பர்க: தத்வரேண்ய முபாஸ்மயே//**

**பொருள் :** செங்கதிர்த்தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம். அவன் எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக.

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

# வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 9 இதழ்: 4

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 70101 88571

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| உங்கள் சிந்தனைக்கு | 10 |
| அட்டைப்பட விளக்கம் | 12 |
| தை மாத விசேஷங்கள் | 14 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 15 |
| ஸ்ரீமத் பாகவதம் | 17 |
| ஆதிசங்கரர் | 20 |
| மூதுரை (ஔவையார்) | 23 |
| ஸ்ரீ குருவாயூர் கோயில் வரலாறும் மஹிமைகளும் | 25 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 29 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 30 |
| தர்மத்தின் குரல் | 31 |
| மூத்தோரே கவனியுங்கள் | 33 |
| பூக்களோடு பேசுவோம் | 45 |
| மகாகவி | 56 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 63 |
| வியப்பூட்டும் விருஜ் பூமி யாத்திரை | 65 |
| சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில் | 69 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI SEITHIGAL**
City Union Bank, Velachery Branch
A/c No. 510909010246740
IFSC : CIUB 0000262



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# பூஜ்யஸ்ரீ நெரூர் ஸாஸ்தா ஸ்ரீவித்யா சங்கர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை : மந்திரங்களின் மஹத்துவம்

இது மிக முக்யமான விஷயம். ஜபம் பண்ணுபவர்களை / சொல்பவர்களை காப்பாற்றுவதனாலே மந்த்ரம் என்று பெயர் ஏற்படுகிறது. "மனனாத் த்ராயதே". இதே அர்த்தத்தில் தான் காயத்ரீ என்ற பெயரும் ஏற்படுகிறது. "காயந்தம் த்ராயதே". மந்த்ரத்தை நம்பிய தேசம், வம்ஸம், பரம்பரை நம்முடையது.

லௌகீகமாக பேசும்போது "மந்த்ரத்தில் மாங்காய் பழுக்குமா?" என்று கேட்பார் உண்டு. ஆனால் மந்த்ரம், மந்த்ரமாக உபயோகப்படுத்தப்பட்டால், அதனால் ஆகாதது ஒன்றும் இல்லை. துஷ்ப்ரயோகத்திற்காகவோ, வீன் பலன்களிற்காகவோ, உபயோகத்தல் கூடாது. அச்சமயம், அவை வேலையும் செய்யாது. ஸ்ரத்தையுடன், நம் எண்ணங்களை ஒரு முகப்படுத்தி ஜபித்தோமானால், கண்டிப்பாக பலன் உண்டு. இதை உணர்த்த எத்தனையோ சரித்திரங்கள் உள்ளன.

வேதங்கள் எல்லாமே மந்த்ரங்கள் தாம். ரிஷிகளால் விஸேஷமாக கண்டுபிடிக்கப்பட்டவையே மந்த்ரங்கள். இன்றும் பேச்சு வழக்கில் ஸந்தேஹிக்க முடியாத, மீறமுடியாத விஷயங்களை "வேத வாக்கு" என்று குறிப்பிடும் வளமை உள்ளது.

வேத மந்த்ரங்களோ, தேவதா மந்த்ரங்களோ, அழியா ஸக்தி கொண்டவை. இந்த மந்த்ரத்தை நம்பும் பரம்பரையிலும், வம்ஸத்திலும் நாம் வந்திருக்கிறோம்.

இதை உணர்த்தவும் பல சரித்திரங்கள் உள்ளன. வரும் ஸமயங்களில் இதைப்பற்றி விஸ்தாரமாக பார்ப்போம்.

மந்த்ரம், தெய்வம், குரு, தீர்த்தம், ஜோஸ்யர், வைத்யர், மருந்து இவையெல்லாம் எவ்வளவு தூரம் நம்பிக்கை வைக்கிறோமோ அவ்வளவு தூரம் பலன் கொடுக்கக்கூடியவை. உதாரணமாக நாம் ஒரு தீர்த்தத்திற்கு செல்கிறோம். பவித்ரமான தீர்த்தம் என்றஎண்ணத்துடன் ஸ்நானம் செய்தால் புண்யம் உண்டு. வெறும் ஜல ப்ரவாஹம் என்று மட்டும் எண்ணினால் புறத்தூய்மை மட்டுமே பலன். நம்பிக்கையே அந்த இடத்தில் பலனை நிச்சயிக்கிறது.

மேலும் ஒரு உதாரணம் சொல்ல வேண்டும் எனில் – ஒரு டாக்டர் நம் வ்யாதி குணமாவதற்கு மருந்து எழுதி தருகிறார். அவரிடம், நீங்கள் சரியாக படித்தீர்களா?, இந்த மருந்து சரியானது தானா? பலன் தருமா? என்றெல்லாம் கேட்பதினால் வ்யாதி குணமாகுமா? “டாக்டர் மருந்து கொடுத்திருக்கிறார். அது சரியான மருந்தாக இருக்கும். இதனால் எனக்கு குணமாகும்’’ என்று எண்ணி மருந்து உட்கொள்வதால்தான் குணமாகிறது. சிறு வயதில், அம்மா நமக்கு மருந்து புகட்டும் நேரம். நாம் ஆராய்ச்சி செய்தா சாப்பிட்டோம்.

ஆதலால் எந்த காலத்திலும் ஸ்ரத்தையுடன் (நம்பிக்கையுடன்) செய்யும் காரியத்திற்கே பலன் உண்டு. மந்த்ரங்களை அவஸ்யம் நம்பவேண்டும்.

மேலும் மந்த்ரங்களின் மஹத்வங்களை பார்ப்போம்.

நாராயண:நாராயண

தொடரும்...

*ஸ்வாமி ஸரணம் அய்யப்பா!!*

*ஸ்ரீ நெரூர் ஸாஸ்தா ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடன், நமது நெரூர் ஸ்ரீ வித்யா ந்ருஸிம்ஹ ஆஸ்ரமத்தின் அங்கமான ஸ்ரீ ஹரிஹர அச்சனார் ஸபாவினால் வருடாவருடம் நடத்தப்படும்*

## ஸாஸ்தா ப்ரீதி உத்ஸவம்

*மூன்றாம் ஆண்டாக, க்ரோதி வருடம் பங்குனி மாதம் ஏப்ரல் 3, 4, 2025 தேதிகளில் அச்சன்கோவில் க்ஷேத்ரத்தில் நடக்க இருக்கிறது.*

*ஸாஸ்தா ப்ரீதி என்பது, பகவானை த்ருப்தி படுத்தும் ஒரு பாரம்பரியமான முறை. வைதிகமான பூஜைகளும் நாமஸங்கீர்த்தனமும் முக்ய அங்கங்களாக கொண்டது.*

*கலியில் கண்கண்ட தெய்வமான ஸ்ரீ ஹரிஹரபுத்ர ஸ்வாமி ப்ரத்யக்ஷமாக பக்தர்களுக்கு அனுக்ரஹிக்கும் ஒரு ஸந்தர்பம் இது.*

*எல்லோரும் கலந்து கொண்டு பகவான் மற்றும் குருநாதரின் ஆஸிகளை பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

*பூஜைகள், ஸ்ரீ மஹாஸாஸ்த்ரு ப்ரியதாஸன் ஸ்ரீ அரவிந்த் ஸுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடக்கும்.*

*கைங்கர்யத்தில் பங்கு பெறுவற்கும், மேற்கொண்டு தகவல்கள் தெரிந்து கொள்வதற்கும் :*

*ஸ்ரீ கிஷன் பட் - +91 8105315970*

*ஸ்ரீ ஸுதர்ஸன் - + 91 8778288916*

**வேதபாரதியின் வாசகர்கள், விளம்பரதாரர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும்**
**2025 புத்தாண்டு வாழ்த்துக்கள்**
**பொங்கல் வாழ்த்துக்கள்,**
**மற்றும் குடியரசு தின வாழ்த்துக்கள்.**

## உங்கள் சிந்தனைக்கு....

## 16. நாம ஸங்கீர்த்தனம்

*நாம் தினமும் காலையில் எழுந்ததும் நம்மை சுத்தப்படுத்திக்கொள்ள குளித்துவிட்டு புதிய அல்லது துவைத்த துணியை போட்டுக்கொள்கிறோம். ஆனால் நம்மில் இருக்கும்* **“மனது”** *பழைய மனதுதான். நம்முடைய மனதை மெள்ள மெள்ள பகவானிடத்தில் கொண்டுவரமுடியும். மனதை பகவானிடத்தில் பக்தியோடு ஈடுபடுத்தினால் கடைசியில் அது* **“மையவே ப்ரவிலீயதே”** *என்னிடத்தில் லயித்துவிடுகிறது” என்கிறார் பகவான். (உத்தவ கீதை)*

*ஸ்ரீ நாராயணீயத்தில் முதல் தசகத்தில் 8ஆவது ஸ்லோகத்தில் நாராயண பட்டத்திரி அழகாக எழுதுகிறார்.....*

**நம்ராணாம் ஸன்னிதத்தே ஸததமபி புரஸ்தைரனப்யர்த்திதான..**

**“நம்ராணாம்”** *= வணங்குவோரின்,* **“புர”** *= முன்னிலையில்,* **ஸததம்”** *= எப்போதும்,* **“ஸன்னிதத்தே”** *= தோன்றுகிறார்.*

*உண்மையான பக்தன் ஒன்றும் கேட்கமாட்டான். எப்போதும் பகவானின் நாமத்தை நாமஸங்கீர்த்தனம் செய்து கொண்டே இருப்பான்.*

*ஸ்ரீமத் பாகவதத்தில் கடைசி 12 ஆவது ஸ்கந்தத்தில், கடைசி 13ஆவது அத்தியாயத்தில் கடைசி 23ஆவது ஸ்லோகம்*

**நாம ஸங்கீர்த்தனம் யஸ்ய ஸர்வ பாப ப்ரணாஸனம்/**

**ப்ரணாமோ துக்கஸமனஸ்தம் நமாமி ஹரிம் பரம்//**

**பொருள் :** *எவருடைய நாமஸங்கீர்த்தமானது எல்லா பாபங்களை நாசஞ்செய்கின்றதோ, எவருக்குச் செய்யும் நமஸ்காரம் துக்கங்களைத் தணிக்கக் கூடியதோ அந்த ஸ்ரீஹரி பரமாத்மாவை நமஸ்கரிக்கின்றேன்.*

ப்ரஹலாதனை அவன் தந்தை ஹிரண்யகசிபு ஆசையோடு "மைந்தா! குருகுலம் சென்று வந்தாயே உன் குரு என்ன கற்பித்தார்" என்று கேட்கிறான்.

அதற்கு ப்ரஹலாதன் கூறுகிறான்...

ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ
ஸ்மரணம் பாதஸேவனம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம்
சக்யம் ஆத்ம நிவேதனம்

அந்த பரமனின் பெருமையை கேட்பது, பாடுவது, தியானிப்பது, பாதசேவை செய்வது, அர்ச்சிப்பது, பூஜிப்பது, அடியாராக இருப்பது. நண்பனாக பாவிப்பது, தன்னை அர்ப்பணிப்பது ஆகிய பக்தி முறைகளைத் தான் கற்றதாக கூறும்போது அங்கு **"கீர்த்தனம்",** என்ற பகவானின் புகழ் பாடுதல் குறிப்பிடப்படுகிறது.

நாம ஸங்கீர்த்தனத்தின் பெருமையை பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். எண்ணற்ற மஹான்கள் இக்கருத்தை வலியுறுத்தி கலியுகத்திற்கு சிறந்த உபாயம் **"நாம சங்கீர்த்தனமே"** என்று கூறி சென்றுள்ளார்கள். அவர்களை தொடர்ந்து நாமும் தினமும் நாம சங்கீர்த்தனம் செய்வோம்.

**ஸ்ரீ கிருஷ்ண கோவிந்த ஹரே முராரே**
**ஹே நாத நாராயண வாஸுதேவ.**
**ஸ்ரீ கிருஷ்ண கோவிந்த ஹரே முராரே**
**ஹே நாத நாராயண வாஸுதேவ.**

**D. சூரியநாராயணன்**

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## அட்டைப்பட விளக்கம்

## மணக்குள (மணல் குளம்) விநாயகர்

*உலகில் எத்தனையோ கடவுள்கள் இருந்தாலும் விநாயகரை மட்டுமே முழு முதற் கடவுள் என்கிறோம். காரணம் அவருடைய எளிமையான, அபூர்வமான உருவம்தான். நாம் எதை எழுத ஆரம்பித்தாலும் முதலில் பிள்ளையார் சுழி போட்டுவிட்டுத்தான் ஆரம்பிக்கிறோம்.*

*இந்த கலியுகத்தில் தெருவிற்கு தெரு விநாயகர் கோவில்கள் இருப்பதை நாம் பார்க்கலாம்.*

*தமிழகத்தில் முதன் முதலில் எழுப்பப்பட்ட விநாயகர் கோவில் தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுக மங்கலத்தில் அமைந்துள்ள* **"ஆயிரத்தெண் விநாயகர் கோவில்"** *என்று வரலாறு கூறுகிறது.*

*ஒவ்வொரு ஊரிலும் உள்ள கோவில்களுக்கு ஸ்தல புராணம் இருக்கும். அப்படி பாண்டிச்சேரியில் இருக்கும்* **"மணக்குள விநாயகர் கோவில்"** *ஸ்தல புராணம்...*

*பாண்டிச்சேரி 1674 ஆம் ஆண்டு முதல் பிரெஞ்சு நாட்டிற்கு அடிமையாகி இருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரிக்கு வருவதற்கு முன்பிருந்தே, அதாவது 1666 ஆம் ஆண்டுக்கும் முன்பே இந்த கோவில் இருந்துள்ளது.*

*பாண்டிச்சேரி கடற்கரை அருகில் ஒரு குளம் இருந்தது. அந்த குளத்திற்கு* **"மணற்குளம்"** *என்று பெயர். ஒரு* **சமயம் "தொள்ளைக்காது சுவாமி"** *என்னும் சித்தர் அந்த குளத்தின் அருகே இருந்த வில்வமரத்தின் அடியில் த்யானம் செய்துகொண்டிருந்தார். அப்போது அவருக்கு ஒரு குரல்* **"நான் இந்த குளத்தில் உள்ளேன். என்னை எடுத்து பிரதிஷ்டை செய்"** *என்று கேட்டது.*

அந்த சித்தர் அந்த குளத்தில் இறங்கி பார்த்தபோது ஒரு விநாயகர் விக்ரஹம் கிடைத்தது. அதை அந்த வில்வமரத்தின் அடியிலேயே பிரதிஷ்டை செய்தார். ஊர் மக்களும் அந்த விநாயகரை வழிபடத்துவங்கினர்.

பிரெஞ்சுக்காரர்களுக்கு இப்படி மக்கள் அந்த விநாயகரை வழிபடுவது பிடிக்கவில்லை. ஒரு நாள் இரவு ஆட்களை வைத்து விநாயகரை கடலில் வீசிவிட்டார்கள். மறு நாள் காலையில் விநாயகர் சிலை அதே இடத்தில் இருந்தது. ஆனால் பிரெஞ்சுக்காரர்கள் தொடர்ந்து பல்வேறு இடையூறுகள் கொடுத்துவந்தார்கள். பின்னர் விநாயகரின் பெருமையை உணர்ந்து, வியந்து, பயந்து கோவில் அதே இடத்தில் இருக்க பல பணிகளும் செய்து கோவில் முன் மண்டபம் கட்டிக்கொடுத்து பக்தர்கள் தரிசனம் செய்ய வழிவகுத்தார்கள். ஆகையால் இவரை **“வெள்ளைக்கார பிள்ளையார்”** என்றும் கூறுவார்கள்.

**“தொள்ளைக்காது சித்தர்”** மறைவிற்கு பின் பல சீர்திருத்தங்கள் செய்து ஆகம முறைப்படி வழிபாடுகள் நடைபெறத் தொடங்கின. **“மணல் குளத்து விநாயகர்”** என்றபெயர் மருவி தற்போது **“மணக்குள விநாயகர்”** என்று அழைக்கப்படுகிறது.

தற்போது கோவில் மூலஸ்தானத்தில் மூல விநாயகருக்கு இடது பக்கம் **“தொள்ளைக்காது சித்தர்”** ஸ்தாபித்த விநாயகர் சிலையும் இருப்பதை காணலாம்.

பாண்டிச்சேரிக்கு பெருமை சேர்க்கும் ஆன்மீக ஸ்தலங்களில் அருள்மிகு **“மணக்குள விநாயகர்”** முதன்மையாக விளங்குகிறது.

**D. சூரியநாராயணன்**

## குரோதி வருஷம் - தை மாத விசேஷங்கள்

**(ஜனவரி 14.01.2025 முதல் பிப்ரவரி 12.02.2025 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 14.01.2025 | தை 01 | செவ்வாய் | உத்தராயண புண்ய காலம், பொங்கல் பண்டிகை |
| 15.01.2025 | தை 02 | புதன் | கனு, மாட்டுப்பொங்கல் |
| 17.01.2025 | தை 04 | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |
| 18.01.2025 | தை 05 | சனி | திருவையாறு ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை |
| 19.01.2025 | தை 06 | ஞாயிறு | ஷஷ்டி |
| 20.01.2025 | தை 07 | திங்கள் | திருவண்ணாமலை ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் ஜயந்தி |
| 24.01.2025 | தை 11 | வெள்ளி | அனுஷம் |
| 25.01.2025 | தை 12 | சனி | ஏகாதசி |
| 27.01.2025 | தை 14 | திங்கள் | ப்ரதோஷம் |
| 29.01.2025 | தை 16 | புதன் | தை அமாவாஸை |
| 02.02.2025 | தை 20 | ஞாயிறு | சதுர்த்தி |
| 03.02.2025 | தை 21 | திங்கள் | ஷஷ்டி |
| 04.02.2025 | தை 22 | செவ்வாய் | ரதஸப்தமி |
| 05.02.2025 | தை 23 | புதன் | பீஷ்மாஷ்டமி |
| 06.02.2025 | தை 24 | வியாழன் | தை கிருத்திகை |
| 08.02.2025 | தை 25 | சனி | ஏகாதசி |
| 10.02.2025 | தை 28 | திங்கள் | ப்ரதோஷம் |
| 11.02.2025 | தை 29 | செவ்வாய் | தைப்பூசம் |
| 12.02.2025 | தை 30 | புதன் | பௌர்ணமி |

## 29.01.2025 புதன்கிழமை - தை அமாவாசை

குரோதி நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே ஹேமந்த ருதௌ, மகர மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயம் புண்யதிதௌ வாஸர : வாஸரஸ்து ஸௌம்ய வாஸர யுக்தாயாம் ச்ரவண நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம் குண ஸகல விஸேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிளெ.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 68

## விஷ்ணு பகவான் சொன்னது

**கீதா மே பரமா வித்யா ப்ரஹ்மரூபா ந ஸம்சய:/**
**அர்த்தமாத்ராக்ஷரா நித்யா ஸ்வானிர்வாச்ய பதாத்மிகா//**

**பொருள் :** எனது பரம வித்தையாயிருப்பது கீதை. அது பிரம்மரூபம் என்பதில் சம்சயமில்லை. அர்த்த மாத்திரையாய், அக்ஷரமாய், நித்தியமாய் எனது சொரூபத்தைச் சொல்லால் விளக்கமுடியாததாய் இந்த ஞானம் உள்ளது.

## அத்தியாயம் மூன்று
## கர்ம யோகம்

**உத்ஸீதே³யுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேத³ஹம்/**
**ஸங்கரஸ்ய ச கர்தா ஸ்யாமுபஹன்யாமிமா : ப்ரஜா://**
**(கீதை 3-24)**

**பொருள் :** நான் கர்மங்களைச் செய்யாமல் விட்டால் இம்மனிதர்கள் அனைவரும் சீர்குலைந்து போவார்கள். மேலும், நான் சீர்குலைவு செய்கிறவனாகவும், இம்மாந்தர் அனைவரையும் அழிப்பவனாகவும் ஆவேன்.

**விளக்கம் :** இந்த ஸ்லோகத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கர்ம யோகத்தின் அவசியத்தை நிரூபிக்கிறார். அவர் கூறும்போது நான் வேலை செய்யவில்லையானால் மக்கள் வேலை செய்யமாட்டார்கள். அதன் விளைவாக வாழ்க்கையின் அனைத்து துறையிலும் குழப்பம் ஏற்படும், எங்கும் அமைதி இருக்காது, மக்கள் அநியாயக்காரர்களாகவும், பாவம் செய்பவர்களாகவும் மாறிவிடுவார்கள். அதன் விளைவாக இயற்கை பேரழிவுகள் ஏற்படும். உயிரினங்கள் அழியும். இந்த

உலகமும் அழியும். எனவே உலகத்தின் பாதுகாப்பிற்காகவும், நலனுக்காகவும் நான் உழைக்கிறேன் என்று அர்ஜுனனிடம் விளக்குகிறார்.

அடுத்த ஸ்லோகத்தில் வினையாற்றுதலில் விவேகிகளுக்கும், மற்றவர்களுக்கும் உள்ள வேற்றுமையை கூறுகிறார்.

**ஸக்தா: கர்மண்யவித்³வாம்ஸோ யதா² குர்வந்தி பா4ரத/**
**குர்யாத்³வித்³வாம்ஸ்ததா²ஸக்தஸ்சி கீர்ஷுர்**
**லோகஸங்க்³ரஹம்// (கீதை 3-25)**

**பொருள் :** *பரதகுலத் தோன்றலே! கர்மங்களில் பற்று கொண்ட அஞ்ஞானிகள் எவ்விதம் கர்மங்களைச் செய்கிறார்களோ, பற்றில்லாத தத்துவஞானியும் உலகத்திற்கு வழிகாட்டுதலைச் செய்ய விரும்பி, அவ்விதமே கர்மங்கள் செய்ய வேண்டும்.*

**விளக்கம் :** *பாமரராகிய நாம் எல்லோரும் கர்மம் செய்வதால் ஏற்படும் பலனில் ஆசைவைத்து கர்மம் செய்கிறோம். அதாவது பொருள் ஈட்டி அதை அனுபவிக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும் என்றஆசையால் ஓயாது உழைக்கிறோம். ஆனால் ஞானிகளோ ஆசாபாசம், பந்தம் இல்லாமல் உலக நலனுக்காக கர்மம் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த ஸ்லோகத்தின் உட்பொருள்.*

தொடரும்.....

**14.01.2025 செவ்வாய்கிழமை - உத்தராயண புண்யகால தர்ப்பணம்**

*குரோதி நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே ஹேமந்த ருதௌ, மகர மாஸே, க்ருஷ்ணபக்ஷே, ப்ரதமாயாம் புண்யதிதௌ வாஸர : வாஸரஸ்து பௌம வாஸர யுக்தாயாம் புனர்வஸு நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணு கரண ஏவம் குண ஸகல விஸேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், ப்ரதமாயாம் புண்யதிதௌ.*

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி பகுதி - 46

## ஸ்கந்தம் — 5
## "ஜடபரதர்" சரித்திரம்

*மரணத் தறுவாயில் பரதர் மானை நினைத்துக்கொண்டே உயிரை விட்டதால் அடுத்த பிறவியில் அவர் கங்கைக் கரையில் ஒரு மானாகப் பிறந்தார். ஆயினும் தன்னுடைய யோகச் சிறப்பினால் அந்திம காலத்தில் ஒரு மான் குட்டியின் மீது பந்தம் கொண்டதன் விளைவாக தற்போது ஒரு மானாக ஜன்மம் எடுக்க நேர்ந்தது என்பதை நன்கு உணர்ந்தார். அதனால் மற்றமான்களுடன் கலக்காமல் தனியாக இருந்து முந்தைய பிறவியில் தான் வாழ்ந்த புலஹரின் ஆஸ்ரமத்தை அடைந்து அங்கு கிடைத்த இலைகள், சருகுகள் ஆகியவற்றைமட்டும் உட்கொண்டு இடையறாது பகவானை தியானித்து தனது இறுதி நாள் வருவதற்காக காத்திருந்தார்.*

*காலன் வந்த சமயம், கண்டகி நதியில் தன் மான் சரீரத்தை விடுத்து உயிர் நீத்தார். ஆனால் பரதனின் பிறப்பு அத்துடன் முடியவில்லை!*

*பரதன் மானாக பிறந்து இறந்தபின் அடுத்த பிறவி எடுக்கிறார். பரதன் ஒரு* **"யோகப் பிரஷ்டன்"** *அதாவது "பஞ்ச பூதங்களில் தன்னையே பார்ப்பவன் மற்றும் தன்னில் பஞ்ச பூதங்களை பார்ப்பவனே* **"யோகப் பிரஷ்டன்"** *ஆவான்.*

*யோகப் பிரஷ்டனுடைய பிறப்பை பற்றி பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீமத் பகவத் கீதையில் அழகாக விளக்குகிறார்.*

**...சுசீனாம் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோபி ஜாயதே**
**அதவா யோகினாமேவ குலே பவதி தீமதாம்..**

**(கீதை 6-41 & 42)**

**பொருள் :** *யோகப் பிரஷ்டன் புண்ணியம் செய்தவர். உலகங்களை அடைந்து, அங்கு நெடிது வாழ்ந்திருந்து, செல்வம் நிறைந்த புனிதவான் இல்லத்தில் பிறக்கிறான் அல்லது அறிவாளர்களாகிய யோகிகள் குலத்திலேயே பிறக்கிறான்.*

*மானாக பிறந்து இறந்த பரதன் தன் அடுத்தபிறவியில் ஆங்கீரசக் கோத்திரத்தைச் சேர்ந்த பிராம்மணன் ஒருவனுக்கு அவனுடைய இரண்டாவது மனைவியின் பிள்ளையாக பிறந்தார். பகவானின் அருளால் இந்த பிறவியிலும் பரதனுக்கு முன் பிறப்புகளின் நினைவு இருந்தது.*

*மீண்டும் மானுடப் பிறவு கிடைத்தது குறித்து மகிழ்ச்சியுற்றஅவர் இம்முறைமிகவும் கவனமாக இருக்க முடிவு செய்தார். தளைகள் ஏற்படும் என அஞ்சி, தன் பக்தியை பரம ரகசியமாக வைத்துக்கொண்டார். யாரிடமும் பேசுவதில்லை, எதையும் விரும்பிக் கேட்பதில்லை, ஆகாரம் போட்ட போது சாப்பிட்டுக்கொண்டு, பகவானை மனத்தினால் தியானம் செய்து கொண்டு தன்னை பைத்தியக்காரன், அறிவீனன், குருடன், செவிடன் என்றவடிவமாக உலகத்தோருக்குக் காண்பிக்கலானார்.*

*தன்னுடைய மகன் மூடனாகப் பிறந்துவிட்டான் என்று எண்ணி அவருடைய தந்தை வைதீகச் சடங்குகளை முறைப்படி செய்ய விரும்பி உபநயனம் செய்துவைத்தார்.*

*ஆனால் பரதரோ நான்கைந்து மாதங்கள் கற்பித்தும் ப்ரணவம் மற்றும் காயத்ரீ மந்திரத்தைக்கூட ஸ்வர வரிசை பிழன்று வேண்டுமென்றே தப்பும் தவறுமாகச் சொல்வார்.*

*தந்தையாகத் தன் கடமையை நிறைவேற்றவேண்டும் என்றெண்ணிய பரதனின் தந்தை விடாமல் பரதருக்கு கல்வியை கற்பித்து வந்தார்.*

ஆனால் பரதரோ எதிலும் கவனம் செலுத்துவதில்லை. இதை நினைத்து வருந்தி வருந்தி பரதருடைய தந்தை காலகதியை அடைந்தார். பரதனின் தாய் பரதனையும், அவன் சகோதரியையும் மூத்தவள் வசம் ஒப்படைத்துவிட்டு கணவனுடன் உடன்கட்டை ஏறினாள்.

பரதனின் மூத்த சகோதரர்கள் பரதனை பித்தன் என்று ஒதுக்கினார்கள். கீழ்த்தரமான வேலைகளில் அவனை ஈடுபத்தினர். வயலிலே காவல் காக்கும்படி கட்டளை இட்டார்கள். ஆனால் பரதன் எதற்கும் கவலைப்படவில்லை. யார் என்ன வேலை ஏவினாலும் செய்வார். கூலி கொடுத்தால் வாங்கிக் கொள்வார். கொடுக்கவில்லையெனில் கேட்கமாட்டார். யார் என்ன உணவு கொடுத்தாலும் அதை ருசி பார்க்காமல் உட்கொள்வார். யார் எவ்வளவு கேலி செய்தாலும், அவமதித்தாலும் உணரமாட்டார். அவருக்கு ஆன்மஞானம் இயற்கையிலேயே இருந்ததால் குளிர்-வெப்பம், மான அவமானம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டாலும் சரீரப் பற்று இல்லாமல் இருந்தார்.

இடுப்பிலே அழுக்கேறிய கந்தல் துணியுடன் அவரைப் பார்ப்பவர்கள் அவர் ஒரு பிராமணன் என்பதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். கறுத்துப் போய் காட்சியளித்த பூணூல்தான் அவர் பிராமணன் என்பதற்கான சாட்சியாக இருந்தது.

பரதன் வித்துவானாக இருந்தும் மூடனைப் போலவும், பித்தனைப் போலவும் திரிந்து கொண்டிருந்தார். அதனால் அவருக்கு **“ஜடபரதர்”** என்றபெயர் வழங்கலாயிற்று.

ஒரு சமயம் காட்டுமிராண்டிகளின் தலைவன் ஒருவன், தனக்கு மகப்பேறு வேண்டி, பத்ரகாளிக்கு நரபலி கொடுக்க குறையற்றமனிதன் ஒருவனைத் தேடிக்கொண்டிருந்தான்.

ஸ்ரீமத் பாகவதம் தொடரும்...

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன்** **பகுதி 38**

## அத்தியாயம் 15
## (சர்வக்ஞ பீடத்தில் ஸ்ரீசங்கரர்)

ஸ்ரீ சங்கரர் தன் சிஷ்யர்களுடன் ஸ்ரீசைலத்திலிருந்து கிளம்பி மெதுவாக நடந்து பல க்ஷேத்திரங்களைக் கடந்து மேற்குக்கடற்கரையில் உள்ள **“கோகர்ணம்”** வந்து அடைந்தார்.

ஸ்ரீ சங்கரர் கோகர்ணத்தில் உள்ள **“கோகர்ணேச்வரமஹாதேவர்”** கோவிலுக்குச் சென்று சிவனை தரிசனம் செய்தார். ஸ்ரீசங்கரரின் விஜயம் ஊர் எல்லாம் பரவியது. மக்கள் ஆர்வத்துடன் ஸ்ரீசங்கரரின் உபதேசங்களை கேட்க வந்தார்கள்.

அந்த ஊரில் இருந்த **“நீலகண்டர்”** என்ற ஒரு பண்டிதர் **“சிவதத்பரம்”** என்ற ஒரு பாஷ்யம் எழுதியிருந்தார். அதை எடுத்துவந்து ஸ்ரீ சங்கரரிடம் வாதம் செய்தார். வாதத்தில் தோல்வி அடைந்து ஸ்ரீ சங்கரரின் தெய்வீகத்தன்மையைக் கண்டு அவரை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தான் இயற்றிய **“சிவதத்பரம்”** என்ற க்ரந்தத்தை ஸமுத்திரத்தில் எறிந்தார்.

கோகர்ணத்திலிருந்து ஸ்ரீசங்கரர் சிஷ்யர்களுடன் நடந்து **“ஹரிஹரபுரம்”** என்ற இடத்தை வந்தடைந்தார்கள். அங்கு சில நாட்கள் இருந்தபின் அங்கிருந்து கிளம்பி **“மூகாம்பிகை”** வந்தடைந்தார்.

**“மூகாம்பிகை”** மிகவும் சக்தி வாய்ந்த கோவில் உள்ள இடம். இந்த கோவில் குடகாசலத்திற்கு அருகே அடர்ந்த காட்டில் அமைந்துள்ளது. இதன் அருகில் **“சௌபர்ணிகா”** நதி ஓடுகிறது. இங்கு அம்பிகை சாக்ஷாத் பரமேஸ்வரியாகவே விளங்குகிறாள்.

ஸ்ரீசங்கரர் ஒரு நாள் மூகாம்பிகை கோவிலுக்கு தரிசனத்திற்குச் செல்லும்போது ஒரு விசித்திரமான ஸம்பவம் நிகழ்ந்தது.

ஸ்ரீசங்கரர் செல்லும் வழியில் ஓர் இடத்தில் ஒரு தாய் இறந்த தன் மகனை மடியில் கிடத்திக்கொண்டு அழுதுகொண்டிருந்தாள். அவளருகில் அந்த குழந்தையின் தந்தையும் அழுதுகொண்டிருந்தார். ஸ்ரீ சங்கரர் அங்கு சென்றதும் அந்த தாய் ஸ்ரீசங்கரரிடம் "என் குழந்தையை ஒரு ஸர்ப்பம் தீண்டிவிட்டது பகவான்! தாங்கள்தான் இவனைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறினாள். ஸ்ரீசங்கரர் குழந்தையைப் பார்த்தபின் "இவனுடைய ப்ராரப்தம் இன்னும் முடியவில்லையே. இவன் உயிரோடுதான் இருக்கிறான்" என்று கூறி தன் கமண்டலத்திலிருந்து சிறு ஜலத்தை அந்த குழந்தையின் மேல் தெளித்தார். அந்த பாலகன் தூக்கத்திலிருந்து எழுந்துகொள்வது போல் எழுந்தான். அந்த தம்பதிகள் ஆனந்தக் கண்ணீரோடு ஸ்ரீ சங்கரர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். ஸ்ரீ சங்கரர் "எல்லாம் ஜகதாம்பிகையின் கருணையே. ஆயுட்காலம் முழுவதும் அம்பாளிடம் பக்தியோடு இருங்கள்" என்று கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினார்.

இறந்த குழந்தை பிழைத்தெழுந்த விஷயம் காட்டுத்தீ போல் நாடெங்கும் பரவியதால் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக ஸ்ரீ சங்கரரின் தரிசனத்திற்கு வர ஆரம்பித்தார்கள்.

ஸ்ரீசங்கரர் மூகாம்பிகை க்ஷேத்திரம் சென்று ஜகதாம்பிகையை ஸ்துதித்து ஒரு ஸ்தோத்திரம் இயற்றினார். அங்கு ஏராளமானோர் ஸ்ரீ சங்கரரை தரிசித்து உபதேசம் பெற்றார்கள்.

அங்கு இருந்த பண்டிதர்கள் சிலர் ஸ்ரீ சங்கரரிடம் வாதம் செய்ய நினைத்தார்கள். ஆனால் அவரை வாதத்தில் வெல்ல முடியாது என்று அறிந்தபொழுது

*அவர்கள் ஸ்ரீசங்கரரிடம் "நாங்கள் இந்த க்ஷேத்திரத்தில் ஒரு சிறிய யந்த்ரத்தை ரஹஸ்யமாக ஸ்தாபித்திருக்கிறோம். அங்கு ஒரு இரும்பிலான வளையத்தை வைத்திருக்கிறோம். அந்த வளையத்தை அம்பாளை தியானம் செய்துகொண்டு மேலே வீசவேண்டும். அந்த வளையம் சரியாக இந்த யந்திரத்தின் நடுவில் விழுந்தால் உங்களுடைய மதம் அம்பாளுக்கு சம்மதம் என்று நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்" என்றார்கள்.*

*இதைக்கேட்ட ஸ்ரீசங்கரர் சிரித்துக்கொண்டே பத்மபாதரை நோக்கி பேசாமல் இருக்குமாறு சைகை செய்தார். அவர்கள் காட்டிய அந்த வளையத்தைக் கையில் எடுத்து தியானம் செய்து மேலே எறிந்தார். அந்த வளையம் சரியாக அந்த யந்திரத்தின் நடுவில் விழுந்தது. அதைக் கண்ட எல்லோரும் அதிசயித்தனர்.*

*ஸ்ரீ சங்கரரை பக்தியுடன் வணங்கி அவரை அந்த சர்வக்ஞ பீடத்தில் உட்கார வைத்தார்கள்.*

*இன்றும் மூகாம்பிகை சென்றால் குடகாசலத்தில் ஒரு குன்றின்மேல் ஸ்ரீசங்கரர் உட்கார்ந்த சர்வக்ஞ பீடத்தைதரிசிக்கிலாம்.*

*மூகாம்பிகையிலிருந்து கிளம்பிய ஸ்ரீசங்கரரும் சிஷ்யர்களும் **"ஸ்ரீபலி"** என்கிற கிராமத்தை அடைந்தார்கள். அந்த கிராமத்தில் ஆசாரசீலர்களான பிராமணர்கள் ஏராளமானோர் வாழ்ந்து வந்தனர்.*

தொடரும்...

வேதபாரதி திருச்சி சார்பாக நடைபெற்ற கோடி காயத்ரீ ஜப யக்ஞ கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்.

## ஔவையார்

# "மூதுரை"

(பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டது)

### வெண்பா 28



**சந்தன மென் குறடு தான் தேய்ந்த காலத்தும்**
**கந்தம் குறைபடாது, ஆதலால் – தம்தம்**
**தனம் சிறியர் ஆயினும் தார் வேந்தர் கேட்டால்**
**மனம் சிறியர் ஆவரோ மற்று?**

**பொருள் :** *தேய்ந்த மெலிந்திருந்தாலும் சந்தனம் (சந்தன கட்டை) மணம் குறைவதில்லை. அதைப்போலவே தாராள குணம் படைத்த அரசர்களும் தன் பொக்கிஷம் குறைந்த காலத்தும் மனம் மாறுவதில்லை.*

**விளக்கம் :** *இந்த பாடலில் ஔவையார் மேன்மக்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்களுடைய குணம் என்ன என்பதை சந்தனத்துடன் ஒப்பிட்டு பாடியுள்ளார்.*

*சந்தனக் கட்டையை (**"குறடு"** என்றால் கட்டை என்று பொருள்) இழைத்தால் நல்ல மணமுள்ள சந்தனம் கிடைக்கும். சந்தன கட்டையை தேய்த்துக்கொண்டே இருந்தால் அது ஒரு மெல்லிய தகடுபோல் ஆகிவிடும். அப்போதும் கூட அதன் மணம் (வாசனை) குறையாது. அது அதன் இயல்பு.*

*அதுபோல் அரசர்கள் தங்களுடைய நிலையிலிருந்து கீழ் இறங்கிவிட்டாலும் (செல்வம் இல்லாமல் போனாலும்) அவர்களது உள்ளம் கொடைக் குணத்திலிருந்து சிறிதும் குறையாது. இல்லை என்று சொல்லமாட்டார்கள். இது இவர்கள் இயல்பு.*

*மஹாபாரதத்தில் ஒரு காட்சி. கர்ணன் போர்க்களத்தில் குற்றுயிராக கிடக்கிறான். அப்போது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு வயதான கிழ வேதியனைப்போல் தன்னுடைய உருவத்தை மாற்றிக்கொண்டு கர்ணன் இருந்த இடத்திற்குச் செல்கிறார். அவரைப் பார்த்ததும் கர்ணன் ஐயா வேதியரே! வாருங்கள். தாங்கள் யார்? தங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.*

*கிழ வேடத்தில் இருந்த கண்ணன் கர்ணனிடம் "கொடை வள்ளலே! நான் மேரு மலையிலிருந்து வருகிறேன். நீ வருவோர்க்கெல்லாம் வாரிவழங்கும் வள்ளல் என்று கேள்விப்பட்டேன். எனக்கு நீ செய்ய முடிந்த உதவியை இப்போதே செய்தால் நல்லது" என்றார்.*

*இதைக் கேட்ட கர்ணன் "ஐயா வயது முதிர்ந்த அந்தணரே, உமக்கு என்னிடமிருந்து எது வேண்டுமோ அதைக் கேளும், கட்டாயம் கொடுக்கிறேன்'' என்றான். கர்ணனின் குரலில் உறுதி தெரிந்தது.*

*பகவான் கண்ணன் "வள்ளல் பெருந்தகையே! நீ இதுவரை செய்திருக்கும் புண்ணியம் எல்லாவற்றையும் எனக்கு தானமாக கொடு. நீ சொன்ன சொல் தவறாதவன். ஆகவே நான் கேட்டதைத் தயங்காமல் கொடுப்பாய் என்று எண்ணுகிறேன்".*

*கர்ணன் "வேதியரே! தாங்கள் கேட்டதை உமக்கு கொடுப்பதில் நான் பெருமைப்படுகிறேன், இதோ என்னுடைய புண்ணியம் முழுவதையும் பெற்றுக்கொள்ளும்'' என்று கூறிவிட்டு வேதியரின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தான்.*

*"கர்ணா மிக்க நன்றி கையில் தண்ணீரைத் தாரை வார்த்து முறைப்படி உன் புண்ணியத்தை எனக்கு தானம் செய்து கொடு'' என்றான் வேதியன்.*

*அந்த பயங்கரமான போர்க்களத்தில் தாரை வார்த்துக் கொடுக்க தண்ணீர் கிடைக்கவில்லை. கர்ணன் தன் மார்பிலிருந்து வழிந்து கொண்டிருந்த இரத்தத்தை ஏந்தி அதையே வேதியரின் கையில் தண்ணீராக வார்த்து கொடுத்தான்.*

*ஔவை பாட்டி கூறியதுபோல் நாமும் நல்லவர்களாக வாழ்வோம், இல்லை என்று சொல்லாத மனம் உள்ளவர்களாக வாழ்வோம்.*

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*

**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**

வேளச்சேரி

ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா



# ஸ்ரீ குருவாயூர் கோயில் வரலாறும் மஹிமைகளும்

நாராயணன் பகுதி 4

## அத்தியாயம் – 2
## மூல விக்ரஹம் பிரதிஷ்டை

குருவாயூரில் உள்ள மூல விக்ரஹம் துவாபர யுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணரின் பெற்றோர்களான வசுதேவரும், வாசுகியும் பூஜித்து வந்தார்கள். அதன் பிறகு கிருஷ்ணரே அந்த விக்ரஹத்தை துவாரகையில் தன் மாளிகையில் வைத்து பூஜித்துவந்தார்.

அவதார காரியம் முடிந்து பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீவைகுண்டம் திரும்பும் வேளை வந்தது. அப்போது அவருடன் கடைசி வரையிலும் இருந்த அவரது பக்தரான **"உத்தவர்"** கிருஷ்ணா நீங்கள் இல்லாமல் இந்த உலகத்தில் நான் எப்படி வாழ்வேன்? தாங்கள் இல்லாவிட்டால் இந்தக் கலியுகத்தில் பூலோக வாசிகள் எல்லாம் விவரிக்க முடியாத இன்னல்களுக்கு ஆளாக நேரிடுமே! அதற்கு தாங்கள் எப்படி நிவாரணம் அளிக்கப் போகிறீர்கள்? என்று கேட்டு வேதனையுற்றார்.

அதைக் கேட்ட ஸ்ரீகிருஷ்ணர் "மிகவும் பக்தி வாய்ந்த உத்தவா! என் அவதாரத்தின் உத்தேசம் பூர்த்தியாகிவிட்டது. இந்த விக்ரஹத்தில் நான் என்றென்றும் வாழ்ந்துக்கொண்டு, என் பக்தர்களுக்கு அருள்புரிந்தவண்ணம் இருப்பேன். நான் வைகுண்டம்

போன பிறகு ஏழாவது நாள் இந்தத் துவாரகை சமுத்திரத்தில் மூழ்கிவிடும். ஆகையால் நீர் இப்போதே தேவகுருவான பிரகஸ்பதியிடம் (குருவிடம்) சென்று இந்த திவ்ய மங்களமான விக்ரஹத்தை புண்ணியமான பிரதேசத்தில் பிரதிஷ்டை செய்யும்படி கூறு'' என்று சொல்லி உத்தவரை சமாதானப்படுத்தினார்.

இவ்விதம் ஸ்ரீ கிருஷ்ணர் உரைத்தவுடன் உத்தவர் அவரிடமிருந்து மோட்ஷமார்கோபதேசம் பெற்றுக்கொண்டு தேவலோகம் சென்று பிரகஸ்பதியிடம் பகவானுடைய கட்டளையை தெரிவித்தார்.

பிரகஸ்பதியும் பகவானுடைய ஆஞ்ஞையை நிறைவேற்றுவதற்காக துவாரகைக்கு வருவதற்குள் துவாரகை ஸமுத்திரத்தில் அலைகளில் மூழ்கியதால் விக்ரஹம் அலைகளால் அங்கும் இங்கும் உருண்டு கொண்டிருந்தது. பிரகஸ்பதியால் விக்ரஹத்தை எடுக்க இயலவில்லை. அப்போது அவர் வருணனை தியானம் செய்தார். அவருடைய அனுக்ரஹத்தால் சமுத்திரம் சாந்தமாயிற்று.

அப்போது அங்கு வந்த **"வாயு"** பகவானுடைய உதவியால் விக்ரஹத்தை எடுத்து இருவரும் (குருவும் வாயுவும்) உத்தமமான இடத்தை தேடி உலகெங்கும் ஆகாயத்தில் சுற்றி அலைந்தார்கள்.

இவ்விதம் இருவரும் தேடி அலையும் காலத்தில் தென்னை மரங்கள் அடர்ந்து வளர்ந்து பச்சை நிறமாக காட்சியளிக்கும் பிரதேசமொன்றை கண்டார்கள். அது பகவானுடைய அவதாரமான பரசுராமரால் உண்டுபண்ணப்பட்ட **"கேரளம்"** என்று அறிந்தார்கள். அவ்விடமெல்லாம் பார்த்தபோது கேரளத்தின் மேற்கு எல்லையில் ஸமுத்திரக்கரையோரமாக அழகான தாமரை தடாகம் ஒன்று இருப்பதைக் கண்டார்கள்.

அங்கே இறைவனான பரமசிவன் தன் மனைவி பார்வதியுடன் அவர்களுக்கு காட்சி அளித்து "நீங்கள்

வருவதை ஞானதிருஷ்டியால் தெரிந்துகொண்டேன். முன் ஒரு காலத்தில் பிரசேதஸுகளுக்கு இங்கிருந்துதான் நான் **"ருத்ரகீதம்"** பாடி ஞானோபதேசம் பண்ணினேன். ஆகையால் நீங்கள் கொண்டுவந்துள்ள அந்த விக்ரஹத்தை இந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யுங்கள். குருவும் வாயுவுமாகிய நீங்கள் இருவரும் இணைந்து இந்த விக்ரஹத்தை இங்கு நிறுவப்போவதால் இனி இந்த இடத்தின் பெயர் குரு+வாயு = **"குருவாயூர்"** என்று வழங்கப்படும்" என்று ஆசீர்வதித்து பரமசிவனும் பார்வதியும் அந்த தடாகத்தின் எதிர்க்கரையில் இருந்த "மம்மியூர்" திரும்பிவிட்டனர்.

(**வாசகர்களின் கவனத்திற்கு** = "வேதபாரதி செய்திகள்" அக்டோபர் 24 இதழில் நான் எழுதிவரும் **"ஸ்ரீமத்பாகவதம்"** கட்டுரையில் பிரசேதஸுக்களுக்கு பகவான் "பரமசிவன் காட்சி அளித்த அந்த புனிதமான ஏரி தற்போதும் தென்னகத்தில் ஒரு ஊரில் இருக்கிறது. ஆனால் அது ஏரியாக அல்ல ஒரு தெய்வீக குளமாக அது எந்த ஊர் என்று வாசகர்கள் அறியவிரும்பினால் இந்த மாதம் முதல் அடியேன் எழுத ஆரம்பித்துள்ள புதிய கட்டுரையை தொடர்ந்து படித்தால் தெரியும் என்று எழுதியிருந்தேன். அந்த இடம்தான் இன்று குருவாயூரில் அமைந்துள்ள "ருத்ர தீர்த்தம்" என்று அழைக்கப்படும் குளம்)

தொடரும்...






99940 89133 99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Varieties on Order*




**28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91**


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
Contact
9952972436 / 7824807801
WOPPER
Fluid Chemistry

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## ஹிந்து மதம்



நம் மதப்படியும் கர்ம பலனைத் தந்து தீர்ப்புத் தருகிற பலதாதாவான ஈசுவரன் பரம கருணாமூர்த்திதான். ஆனால் அதற்காக லோகம் அதர்மத்தில் மனமறிந்து விழட்டும் என்று விடுகிறவன் அல்ல அவன். அதனால் என்ன பண்ணுகிறான்? நாம் பாப பலனை (புண்ய பலனையும் தான்) அநுபவிப்பதற்காக நம்மை இன்னொரு ஜன்மா கொடுத்து மறுபடி இந்த உலகுக்கே அனுப்பி வைக்கிறான். ஸ்வர்க்க ஆனந்தம். நரகக் கஷ்டம் இரண்டும் இந்த உலகிலேயேதான் இருக்கின்றன. நாம் கலந்தாங்கட்டியாகப் பாபம், புண்ணியம் இரண்டும் போன ஜன்மாவில் பண்ணியிருப்பதால் இப்போது கெட்டது நல்லது இரண்டையும் சேர்த்து அநுபவிக்கிறோம். ரொம்பப்பாவம் செய்தவர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறோம்; ரொம்பப் புண்ணியம் செய்தவர்கள் நிறைய சந்தோஷப்படுகிறோம். பொதுவிலே பார்த்தால் ரொம்பக் கஷ்டப்படுகிறவர்கள் அல்லது சமமாக கஷ்ட – சுகம் உள்ளவர்கள்தான் இருக்கிறோமே தவிர, தாங்கள் பரம சுகமாக இருப்பதாக நினைக்கிறவர்கள் ரொம்பவும் துர்லபமாகவே இருக்கிறார்கள். இதிலிருந்தே நாம் அனைவரும் பொதுவில் பாபமே அதிகம் பண்ணியிருக்கிறோம் என்பது புரிகிறது.

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# ஆத்மஞானம் அடைவதற்கு வேண்டிய தகுதி



சென்றமாத தொடர்ச்சி....

கடைசியில், விதிவிலக்கு இன்றி, இவை எல்லாமே ஒரு நாள் முடிவடைந்துப்போவதால், இவை அற்ப ஆயுளைக் கொண்டதுதான் அன்றோ! ஆகையால், இவையெல்லாம் தங்களுடையவைகளாகவே இருக்கட்டும்” என்று கூறினான். தான் கோரிய வரம்தான் தனக்கு வேண்டுமென்று யமனை அவன் வற்புறுத்தினான். நசிகேதனுடைய மனவுறுதியையும், வைராக்கியத்தையும் கண்டு வியந்த யமன், அவனுக்கு ஆத்மவித்தையை எடுத்துரைத்தார். அதைக் கேட்ட அச்சிறுவன் ஞானியானான்.


அசைக்க முடியாத வைராக்கியத்தைப் பெற்றவனே ஆத்மஞானத்தை அடைவதற்குத் தகுதியுள்ளவனாகிறான் என்னும் இக்கருத்தை, கடோபநிஷத்தில் வரும் இக்கதை நன்கு வெளிப்படுத்துகிறது.

தொடரும்...

புதுவை ஸ்ரீ சக்தி வேதபாரதி சார்பாக கார்த்திகை மாத பௌர்ணமி பூஜை 14.12.2024 அன்று ஸ்ரீமதி கோமதி ராம்குமார் அவர்கள் இல்லத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

வேதபாரதியின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-9 வேதங்கள் வெளிப்பட்டவிதம் தொடர்ச்சி :*

அதனால்தான், அவர்களெல்லாம் ஸூக்தங்களை இயற்றிவர்களல்லர் என்பதை எல்லோரும் அறிகிறார்கள். அதனால்தான் வேதங்களின் சங்கீதக் கட்டமைப்பு மாறவில்லை; வேதங்களின் பாராயணம் சிதைவின்றித் தொடர்கிறது. எனவே, வேதங்கள் மனிதனால் இயற்றப்படவில்லை என்பதை யாரும் சந்தேகிப்பதில்லை.

ஆனால், நெடுங்காலத்திற்குப் பின், தர்மத்திற்குத் தேய்வு ஏற்படும். மக்கள் உடலின் மீது மிக அதிகமான ஆசையை வளர்த்துக் கொள்வார்கள். அதன்விளைவாக, மன ஆற்றல்கள் பலவீனமடையும். தம் கண்களால் கண்டதும் தங்களின் தர்க்கரீதியான ஊகமும்தான் உண்மையென அறுதியிட்டுச் சொல்லத் தொடங்குவார்கள். தம் யூகங்களும் தர்க்கங்களும் மனத்தின் சிருஷ்டிகளே என்பதை அவர்கள் புரிந்துகொள்ள முடியாதவர்களாய்த் தோன்றுவார்கள். அவர்களின் யூகங்களும் தர்க்க நியாயங்களும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போனாலும், அவர்களின் யூகங்கள பாரபட்சமற்ற உண்மைக்கு உகந்ததாகாது. அவர்கள் குர்த் கோடெலின் எச்சரிக்கையையும் புறந்தள்ளி, மாறுபட்ட மனோபாவத்தைக் கைக்கொள்கின்றனர். பகுத்தறிந்து கொள்ளும் அவர்களின் சக்தி, மிகுந்த கீழ்மட்டத்திற்கு இறங்கிவிடுகிறது.

தொடரும்...

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

*வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,*
*சென்னை - 600 042.*




- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*

*24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

**48625585 / 9840545585**

# மூத்தோரே! கவனியுங்கள்!

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 4 பகுதி - 1

## அத்தியாயம் – 1

மனிதன் பிறந்தது முதல் முடிவு வரை இந்த வாழ்க்கை எனும் நாடகத்தில் எண்ணற்ற வேஷங்களை ஏற்கிறான்.

மகன் (அ) மகள்; கணவன் (அ) மனைவி; தாய் (அ) தந்தை; மாமா – மாமி (அ) சித்தி - சித்தப்பா (அ) பெரியப்பா – பெரியம்மா (அ) அத்தை – அத்திம்பேர் (அத்தையின் கணவர் (அ) மாமா – மாமி (அ) அக்கா – அத்திம்பேர் (அக்காவின் கணவர்); அண்ணன் – அண்ணி (அ) நாத்தனார் – நாத்தனாரின் கணவர் ... அடேயப்பா, எத்தனை முகங்களை ஒவ்வொரு மனிதனும் இந்த வாழ்க்கையில் ஏற்கிறான்!

அனைத்து உறவுகளைத் தாண்டிய, உன்னதமான உறவு ஒன்று உண்டென்றால் அது தாத்தா – பாட்டி உறவு தான். காரணம், பொறுப்பெனும் பாரத்தைச் சுமக்காமல், பாசம், அன்பு என்பதை மட்டுமே அடித்தளமாகக் கொண்ட உறவு அதுமட்டுமே.

60 வயது வந்து விட்டாலே, முதலில் பணி ஓய்வு, வங்கி சேமிப்புகளில் 0.5% அதிக வட்டி என்று மட்டுமே நினைவிற்கு வருகிறது. அதற்கு பிறகு, எனக்கு எங்கே வயசாச்சு? அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று "பட்" என்று கூறுபவர்கள் பலருண்டு.

ஏதோ இதுநாள் வரை "எந்த கோயிலுக்கும் போகவேயில்லை" என்பது போல வீராவேசமாக "Tour" செல்பவர்கள் பலருண்டு.

ஏதாவது உடலுக்கு சுகமின்மை வந்து,

ஆஸ்பத்திரி “வாஸம்” முடித்து, பல லட்சங்களை இழந்த பிறகு, “இனி பொது சேவை, நண்பர்கள் குழாம் எதுவும் வேண்டாம். இனி நானாச்சு, என் குடும்பமாச்சு, என் வீடாச்சு” என்று அப்பொழுது தான் “வீடு” பக்கம் பார்வையைத் திருப்புபவர்களும் உண்டு.

இத்தனைப் பிரச்சனைகளுக்கு நடுவே பணிக்குச் செல்லும் மகள் – மாப்பிள்ளை, மகன் – மருமகள், சதா “மொபைலை” கட்டி அணைத்துக் கொண்டிருக்கும் பேரன் – பேத்திகள் என்று மூத்தோர்களான நம் வாழ்க்கையை எப்படி நகர்த்துவது?

என்ன தான் “இன்ஷூரன்ஸ்” செய்து வைத்துக் கொண்டாலும், “நம் உடலுக்கு என்ன ஆகுமோ?” எனும் கவலை.

அடேயப்பா, சீனியர் சிட்டிசனாக வாழ்வதில் இத்தனை கஷ்டமா?

சீனியர் சிட்டிசனாக வாழ்வதில் என்னென்ன பிரச்சனைகள் உள்ளன என்று காண்பதற்காக இத்தொடரை எழுதவில்லை.

மூத்தோராக பேரன் – பேத்திகளுடனும், மற்றவர்களுடனும் எப்படி இணைந்து, அதேசமயம் வானப்ரஸ்தாஸ்ரமத்திற்கு உரிய வகையில் எப்படி வாழ்வது என்பது தான் இத்தொடரின் நோக்கம்.

உங்களோடு இணைந்து நானும் ஒரு சீனியர் சிட்டிசனாக, ஒரு பாட்டியாக இப்பயணத்தை அடுத்து ஒரு வருடம் செய்கிறேன்.

திரு.வேதபாரதி வெங்கட்ராமன்ஜி இதைப் பற்றி பேசிய பொழுது எனக்கு கொஞ்சம் தயக்கம் தோன்றியது. ஆனால், அவர் தொடருக்கானத் தேவையைப் பற்றி கூறும் பொழுது, ஒரு பாட்டியாக பெண் வயிற்றுப் பேத்தியுடனான (வயது 22) என் வாழ்க்கையை திரும்பிப் பார்க்கும் பொழுது,

இப்பொழுது மேற்படிப்பிற்காக அவளுடைய திட்டமிடுதலை காணும் பொழுது, என் குடும்பத்தைச் சார்ந்த மற்றபேத்திகளும், பேரன்களும் ஆக்கபூர்வமாக தங்கள் கல்வியிலும், அதில் அவர்களுடைய நோக்கு-போக்குகளையும் காணும் பொழுதும் நான் வியந்து போகிறேன்.

நம்மைப் போன்று அவர்களில்லை என்பது உண்மை தான். ஆனால் நம்மைப் போன்றேஅவர்கள் தங்கள் 40வது வயதில் மாறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

வாருங்கள் பேசுவோம்.

வள்ளுவப் பெருமானின் ஆசியுடன் இத்தொடருக்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் தேவையென்று வேண்டுகிறேன்.

**“தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னுஞ் செருக்கு”**
**(அதிகாரம் – 62 குறள் – 613)**

“எல்லோருக்கும் உதவி செய்தல் என்னும் உயர்வு, முயற்சி என்னும் பண்புடையவரிடத்தில் நிலைத்திருக்கும்”

தொடரும்...

## புதிய கணக்கு எண்

## வேதபாரதி குருகுலம் ட்ரஸ்ட்

## வேதபாரதி - வேதவகுப்பிற்கான வங்கி கணக்கு எண்கள் விபரம்

| | | |
|---|---|---|
| Account No | : | 510909010268668<br>Current Account |
| IFSC Code | : | CIUB0000262 |
| Bank | : | City Union Bank |
| Branch | : | Velachery |

**80G Approved**

## ஸஹஸ்ரசந்த்ரதர்ஷி

*24.12.2024 புதன் மாலை மந்தைவெளி, நாராயணி கல்யாண மண்டபத்தில் முல்லைவாசல் ப்ரம்மஸ்ரீ டாக்டர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள் மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி தம்பதியருக்கு சதாபிஷேக துவக்கவிழா நடைபெற்றது. 2012ம் ஆண்டு முதல் வேதபாரதி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற வித்திட்டவர்கள். பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஏற்பாடு செய்த எல்லா முக்ய நிகழ்வுகளையும் துவக்கிவைத்து, வழிகாட்டி, ஆசீர்வாதம் செய்து நடத்திக் கொடுத்த தம்பதியர், இன்று பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் வேதபாரதி மூலம் ஆத்திசூடி கொன்றைவேந்தன் சென்றடைய காரணமாக இருந்தவர்கள். இந்தியாவில் உள்ள எல்லா முக்கிய ஸநாதன மடங்களின் பீடாதிபதிகள், மஹான்களிடம், பெருமதிப்பும், மரியாதையும் பெற்றவர்கள். பாரததேசத்தின் மிகப்பெரிய விருதுகளை பெற்றவர்கள். சதாபிஷேக துவக்க விழாவில் வேதபாரதி குழுவினர் சென்று மரியாதை செய்ததை மிகப்பெரும் பாக்யமாக கருதுகிறோம்.*

**செயலாளர், வேதபாரதி**

## ஷஷ்டியப்த பூர்த்தி விழா

*03.12.2024 செவ்வாய்கிழமை அன்று ஊரப்பாக்கம் மினி ஹாலில் வேதபாரதி உறுப்பினர் ஸ்ரீமான் வெங்கடகிருஷ்ணன் மற்றும் ஸ்ரீமதி லலிதா தம்பதியரின் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவானது இரண்டு நாட்களாக வைதீக முறைப்படி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் வேதபாரதி அமைப்பின் சார்பாக அதன் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு தம்பதிகளை வாழ்த்தினார்கள்.*

## திருப்பதி திருமலா பெருமாள் புதுவை வருகை





## ஸந்த்யா வந்தன முகாம்



## ஷோடச தம்பதி பூஜை





## கோபாஷ்டமியை முன்னிட்டு “கோ பூஜை”



## அஸ்வ பூஜையுடன் சூரிய நமஸ்காரம்





புதுவை திருக்காஞ்சி சங்காபரணி நதி புஷ்கரத்தில்
வேதபாரதி குழுவினரால் நடைபெற்ற
சஹஸ்ரநாம பாராயணம்



**புதுச்சேரி (வேதபுரி) பிரசித்திப்பெற்றஅருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோவிலில் கடந்த மூன்றாண்டுகளாக தொடர்ந்து தினமும் வேதபாரதி பாராயண குழுவினரால் நடைபெற்று வரும் வேதபாராயணம்.**






GSTIN : 34ABSFS1026M1ZU
94869 23882
94435 34496
ஸ்ரீஅம்பாள்அங்காடி
நாட்டுமருந்து&பூஜைபொருட்கள்வியாபாரம்



வைத்தியர்
SRI AMBAL ANGADI
ஐந்து தலைமுறை பாரம்பரிய கடை
COUNTRY DRUGS & POOJA ITEMS
எங்களிடம்தரமானகும்பாபிகே&ஹோமபூஜைபொருட்கள்,பிரசவமருந்து,இதரநாட்டுமருந்துகள்,
சித்தா&ஆயுர்வேதாமருந்துகள்கிடைக்கும்.
No.172, Jawaharlal Nehru Street, Puducherry - 1

உ

ஸ்ரீ குருப்யோ நம



# வேத பாரதி

(பாரத பண்பாட்டு அமைப்பு)

புதுச்சேரி

## புதுவை வேதபாரதி பக்தியுடன் லோக க்ஷேமத்திற்காக நடத்தும் மூன்றாம் ஆண்டு

# ஸ்ரீ ராதா மாதவ விவாஹ மஹோத்ஸவம்

இடம் : **ஸ்ரீ ஜெயராம் கல்யாண மண்டபம்,** சித்தன்குடி, புதுச்சேரி.

நாள் : க்ரோதி வருடம் மார்கழி மாதம் 27, 28, **(11-01-2025 சனி** மற்றும் **12-01-2025 ஞாயிறு)**





பாகவதோத்தமர்கள் ...

கடையநல்லூர்

**ஸ்ரீ ராஜகோபால்தாஸ் பாகவதர்** அவர்கள்

**மற்றும் குழுவினர்**

உ

## ஸ்ரீ ராதா மாதவ விவாஹ நிகழ்ச்சிகள்..

**க்ரோதி வருடம், மார்கழி - 27, (11-01-2025), சனிக்கிழமை**

காலை 8.30 மணி

**விக்நேஸ்வர பூஜை / வேத பாராயணம்**

காலை 10.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை

நாம சங்கீர்த்தனம் ஆரம்பம்....

**தோடய மங்களம் / குரு கீர்த்தனைகள் / அஷ்டபதி**

மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை

**விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம் / மஹா மந்த்ர அகண்ட பாராயணம்**

மாலை 6 மணி முதல்

**அஷ்டபதி / தரங்கம் / பஞ்சபதி / கணேசாதி தியானம் / பூஜை / திவ்யநாமம் / சம்ப்ரதாய திவ்யநாமம் / டோலோத்ஸவம்**

**க்ரோதி வருடம், மார்கழி - 28, (12-01-2025), ஞாயிற்றுக்கிழமை**

காலை 6 மணி முதல்

**தனுர்மாத பஜனை / உஞ்சவ்ருத்தி / திவ்யநாமம் / அஷ்டபதி / திவ்ய தம்பதிகள் ஸ்ரீ ராதா மாதவ திருக்கல்யாணம் / ஸ்ரீ ஆஞ்சநேயர் உற்சவம் / மங்கள ஹாரத்தி**

இறையருள் பெற அன்புடன் அழைக்கும் :

திரு. **Er. NJL. ரமேஷ்**
திரு. **R. சந்திரசேகரன்**
ஆலோசனை குழு.



திரு. வழக்கறிஞர். **C. பட்டாபிராமன்,** தலைவர்.
திரு. **V. நடராஜன்,** பொதுச் செயலாளர்.
திரு. **G. ரவிச்சந்திரன்,** பொருளாளர்.
திரு. **N. வேதராமன்,** மூத்த துணை தலைவர்.
திரு. **A. வரதராஜன்,** மூத்த துணை தலைவர்.
திரு. **N. கணேஷ்,** துணை தலைவர்.
திரு. **T. கௌரிசங்கர்,** துணை தலைவர்.
திரு. **G. வெங்கடேசன்,** இணை பொதுச் செயலாளர்.
திரு. **H. கிருஷ்ணமூர்த்தி,** செயலாளர்.
**மற்றும் நிர்வாகிகள் வேதபாரதி, புதுச்சேரி.**

சுபமஸ்து


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY

## வேதபாரதி சார்பாக 29.12.2024 அன்று திருச்சியில் நடைபெற்ற கோடி காயத்ரீ ஹோமம்






# பூக்களோடு பேசுவோம்
## ரோஜா - சர்வதேச மலர் - 1

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**



பூ பேசும் வார்த்தைகள், ஆச்சர்யப்படத் தக்க வகையில் நான் முன் பின் சந்தித்திராத பல பெரியோர்களை, தமிழ் பேரறிஞர்கள் என்னுடன், பேச வைத்து அன்பு பாராட்டுகிறது. சமீபத்திய உதாரணம் "திருமுறைத் தலங்களின் தெய்வீக மரங்கள்" எனும் நூலாசிரியர் கு. சேது சுப்ரமணியன் அவர்களைச் சொல்லலாம். சிவனுக்குரிய புஷ்பங்களைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கும் இவர், "பூ பேசும் வார்த்தைகளை மிக உன்னிப்பாகப் படித்து வருவதும், பாராட்டுவதும் எனக்குப் பெரிய விஷயம். இறைவனுக்கு நன்றி.

சரக்கொன்றையும், மனோரஞ்சிதமும், வெட்சியும் கூட பலரது மனங்களைக் கொள்ளை கொண்டுள்ளதை என்னால் உணர முடிகிறது. பூக்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

பலருக்கு ஏனோ நான் "ரோஜா"வைப்பற்றி எழுதுவேனோ மாட்டேனோ என்ற சந்தேகம் வந்துவிட்டது. எப்போது ரோஜா வரும்? வந்தால் சொல்லுங்கள்... வாங்கிப் படிக்கிறோம் என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். பூக்களின் ராஜா – ராணி என்ற அந்தஸ்த்தைப் பெற்றுள்ள இந்த மலரிடம் ஒரு அந்நியத்தன்மை இருப்பதாலோ என்னமோ என் மனவரிசையில் மிகவும் பின் தங்கிய இடத்தையே பிடித்துள்ளது. இதனை ஒரு ஆன்மீக மலராகக் கருத

*இயலாமல். அன்னியமலராகவும், அழகிற்குரிய மலராகவும், காதலுக்குரிய மலராகவும் மட்டுமே தோன்றுவதால் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தேன். நிஜத்தில் இந்த மலரை அப்படிப் புறக்கணித்து விடமுடியாதபடி தெய்வத் திருவுருவங்களின் பேரலங்காரங்களுக்கும் பெருவிழாக்கால வைபவங்களுக்கும் இன்றியமையாத ஒரு மலராகவே ரோஜா இருக்கிறது என்றஉண்மையை உணர்ந்து ரோஜாவை வாசகர்கள் மனம் குளிரக் குளிரப் பேசவைத்து விடலாம் என்று முடிவெடுத்துவிட்டேன். இனி ரோஜாவுடன் பேசுவோம்...*

*ரோஜாவுக்கு "முளரிப்பூ" என்று தமிழ் இலக்கியப் பெயர் இருப்பதாக எங்கோ படித்த நினைவிருக்கிறது. சரியா? தவறா தெரியவில்லை.*

*காலம் காலமாகவே ரோஜா மலர் பெண்களின் அழகுடன் தொடர்புபடுத்தி உலக இலக்கியங்கள் பலவற்றிலும் பேசப்பட்டு வருகிறது. இதன் சரித்திரம் கிறிஸ்துவத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகவும் இருக்கிறது. ஆண் – பெண் தோன்றிய வரலாற்றுக் காலத்தொடக்கத்திலிருந்தே இந்த மலரும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மலராகவே உள்ளது.*

*காதல் கடவுளான (அந்நிய தேசத்தவர்களுக்கு) ஆஃப்ரோ டைட், கடல் குளியலிலிருந்து எழும் பொழுது, அவளுடைய நிர்வாண மேனியை மறைப்பதற்காகச் சூழ்ந்த வெண் கடல் நுரை... அவள் நடந்து வந்த போது, பூமியில் விழுந்து ரோஜா... வெள்ளை ரோஜாச் செடியாக முளைத்தது என்றும், அவள் தன் காதலனான அடோனிஸ் காட்டுப் பன்றியினால் தாக்கப்பட்டுக் கிடந்த போது... அவனைக் காப்பாற்றுவதற்காக ஓடிய ஓட்டத்தில் அவளது மேனி*

ரோஜா முட்களால் கிழிக்கப்பட்டு, வெள்ளைவெளேர் ரோஜாவின் மீது ரத்தம் சிந்திச் சிந்தி, சிவப்பு ரோஜாக்கள் உண்டாயின என்று “பூக்களின் மொழி” என்கிற புத்தகம் சொல்கிறது.

பாரசீக வரலாறு, தன்னலமற்ற நைட்டிங்கேல் பறவை ஒற்றைவெள்ளை ரோஜா முட்களில் தன்னைத்தானே கழுவேற்றிக் கொண்டதால் சிவப்பு ரோஜாக்கள் உண்டாயின என்கிறது. மற்றொரு சரித்திரமோ இதனை ஆதாம் ஏவாளுடன் தொடர்புபடுத்துகிறது. சிவப்பு ரோஜாக்களுக்கு கிறிஸ்துவம் சொல்லும் கதைகள் பலவாக உள்ளன. வெள்ளை ரோஜாக்களுக்கும் சிவப்பு ரோஜாக்களுக்கும் அந்நியக் கதைகள் பல உள்ளன.

வெள்ளை ரோஜாக்கள் அமைதியையும், சமாதானத்தையும் குறிப்பதால் இன்றும் பல நாடுகளில் இறந்தவர்களின் சமாதியில் வெண் ரோஜாக்களை மட்டுமே வைத்து அஞ்சலி செய்யும் முறைபின்பற்றப்பட்டு வருகிறது. ரோஜாக்களைப் பறிக்கும் போது கூட சில நம்பிக்கைகள் தொடர்புபடுத்தப்படுகின்றன. சிவப்பு அல்லது இளம் சிவப்பு வண்ண ரோஜாக்களைப் பறிக்கும் போது, அதன் இதழ்கள் உதிர்ந்து கீழே விழுந்து விடாமல் பறிப்பதையே விரும்புகிறார்கள். அப்படி ஒரு சில இதழ்கள் உதிர்ந்து விழுந்துவிட்டாலும் அது அபசகுனமாகக் கருதப்பட்டுவிடுகின்றது. ஆனால் அதே சமயத்தில் வெள்ளை ரோஜாக்களின் இதழ்கள் பறிக்கும் போது கீழே விழுந்தால் அது தேவதைகளின் ஆசீர்வாதமாகவும் கருதப்படுகிறது.

ரால்ஃப் வால்டோ எமர்சன் எனும் புகழ்பெற்றஅமெரிக்க கவிஞனின் புகழ்பெற்றவாசகம் ஒன்று என் நினைவுக்கு வருகிறது. “பூவுலகம் பூக்கள்

மூலம் புன்னகைக்கின்றது” என்கிறார். வாஸ்தவம் தானே.. பூக்கள் இல்லையென்றால் சந்தோஷம் ஏது? பூக்கள் இந்த பூமியில் தோன்றிய காலகட்டத்தை யாராலும் துல்லியமாகக் கணிக்க இயலவில்லை என்றாலும், 3.5 கோடி ஆண்டுகளுக்கும் முன்பாக இந்த மலர் பூமியில் இருந்ததாக சான்றுகள் உள்ளதாக ஒரு குறிப்பு தெரியப்படுத்துகிறது. வண்ண வண்ண ரோஜாக்கள் தோட்டப் பயிராக்கப்பட்டு சுமார் 500 ஆண்டுகள் ஆகின்றன. சீனாதான் ரோஜாவின் பெருந்தோட்டம்!

ரோமானியப் பேரரசின் மிகவும் வலிமையான அடையாளச் சின்னம் இந்த ரோஜா மலர்கள். கிரேக்க ரோமா கடவுளர்களுடன் இந்த மலர்களுக்கு நெருங்கிய சொந்தம். ரோஜாவின் ஐந்து இதழ்கள் மட்டுமே கொண்ட மெல்லிய ரோஜா வகை) இயேசு கிறிஸ்துவின் காயங்களுக்கு இணையாகக் கருதப்பட்டு வருகின்றன. கன்னி மேரியுடன் சிவப்பு ரோஜாக்கள் இணைத்துப் பேசப்படுகின்றன... கிறிஸ்துவர்களுக்கு மிக முக்கிய மலர்! இஸ்லாமியர்களுக்கு ரோஜா ஆத்மாவின் அடையாளமாகக் கருதப்படுகிறது. ரோஜாவின் மணம் ஆத்மாக்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய மீடியமாகவும் கருதப்படுகிறது. இங்கிலாந்தின் தேசீய மலர் இந்த மலர். 15 நூற்றாண்டின் ஐரோப்பிய உள்நாட்டுப் போர்களுக்கு “Wars Roses” என்றேபெயர் கொடுத்திருந்தார்கள். இது பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் ஏராளம். இங்கிலாந்தின் “ரக்பி’’ விளையாட்டின் சின்னமாகவும் இந்த அழகிய மலர்தான் திகழ்கிறது. ரோமானியப் பேரரசுக்கும் ரோஜாக்களுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் உண்டு என்பதை அறிந்திருப்பீர்கள். ரோஜாவை, இந்த மக்கள் இன்றும் பல குறியீடுகளுக்காகப் பயன்படுத்துகின்றனர்.

ரோம் நகரத்தினர் ரகசியங்கள் பேசப்படும்போது, தங்களது அறைகளுக்கு முன்பாக ஒரு ரோஜாவை வைத்து விடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். 1986 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் அடையாள மலராக ரோஜா இருந்துள்ளது. அமெரிக்க மாநிலங்களான போர்ட்லாண்ட், ஆரிகான் போன்றஇடங்களில் ரோஜா தோட்டங்கள் மிகப் பிரசித்தம். போர்ட்லாண்ட் ரோஜா தோட்டத்தில் பல அரிய வண்ணங்களில் அதாவது நீலரோஜா, கருப்பு ரோஜா, கருநீல ரோஜா, பச்சை ரோஜா என்று வியக்கத்தக்க அளவுகளிலும் நானே பார்த்து ரசித்துமிருக்கிறேன். மிக எளிதாக கலப்பின வகைகள் உருவாக்கிவிடக்கூடிய அற்புத மலர் இது.

பொதுவுடமைத் தத்துவத்தின் ஏகோபித்த அடையாளச் சின்னமாக சிவப்பு ரோஜா கருதப்பட்டது. பிரிட்டன், அயர்லாந்து, ஃபிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகீஸ், நார்வே, ஸ்வீடன், பிரேசில், டச், பல்கேரியா ஆகிய நாடுகளின் பொதுவுடமைச் சின்னமும் சிவப்பு ரோஜாதான்.

உலகம் ரோஜாவைக் கொண்டாடுவதைப் போல் வேறு எந்த மலரையும் கொண்டாடுவதில்லை என்றே தோன்றுகிறது. இதனைக் காதலுக்குரிய மலராகப் பலர் கருதினாலும், பல உணர்வுகளையும், பல்வேறு தேசத்தினரால் பல்வேறு சூழல்களில் பல்வேறு வண்ண ரோஜாக்களால் சித்தரிக்கப்படுவதால் இதனை “சர்வதேச மலர்” என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது.

அடுத்த இதழில் இம்மலருக்குரிய இந்திய முக்கியத்துவத்தையும் பேசிவிடுவோம்.

தொடரும்...

# அன்றைய பாண்டிச்சேரி
# இன்றைய புதுச்சேரி

**“திருமதி. காந்தலக்ஷ்மி சந்திரமௌலி”.** *இந்த பெயரை படித்தவுடன் “வேதபாரதி செய்திகள்” வாசகர்களுக்கு நினைவில் வருவது* **“பெற்றோர்களே கவனியுங்கள்”** *தொடர் கட்டுரை “வேதபாரதி செய்திகள்” பத்திரிகை ஆரம்பித்த 2014 ஆம் ஆண்டு முதல் இதழிலிருந்து* **“திருமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி”** *அவர்கள் இந்த கட்டுரையை தொடர்ந்து எழுதிவருகிறார்.*

*இவர் எத்தனையோ புத்தகங்கள் எழுதியுள்ளார். இவர் எழுதி சென்னை* **“ஆனந்தாயீ எண்டர்பிரைஸ்”** *அவர்களால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட* **புத்தகம் “இந்திய நாடு என் நாடு”.** *இந்த புத்தகத்தில் ஆசிரியர் அவர்கள் நம் பாரத தேசத்தில் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் குறித்து மிகவும் விளக்கமாகவும், அழகாகவும், வள்ளுவர் குறள்களை மேற்கோள் காட்டியும் எழுதியுள்ளார்.*

*இந்த புத்தகத்தில் அவர் எழுதியுள்ள* **“பாண்டிச்சேரி” (யூனியன் பிரதேசம்)** *சரித்திரம் பகுதியை அவருடைய அனுமதி பெற்று வாசகர்களுக்காக இங்கு வெளியிடுகிறோம்.*

*ஆசிரியர்.*

# பாண்டிச்சேரி
# (யூனியன் பிரதேசம்)

**ஆக்கம் அதிர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்க முடையா னுழை. (அதிகாரம் – 60; குறள் 594)**

தமிழ்நாட்டிலிருந்து, குறிப்பாக சென்னையிலிருந்து மூன்று மணி நேரப் பயணத்தில், கடற்கரையோரமாகச் சென்றால் அன்றைய பாண்டிச்சேரி, இன்றைய புதுச்சேரியை அடையலாம்.

இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆள, பாண்டிச்சேரி ஃபிரெஞ்சு நாட்டவர்களுக்கு அடிமையாக இருந்தது. பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள் மற்றும் விஜயநகர சாம்ராஜ்யங்களால் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு, பீஜாப்பூர் சுல்தானுக்கு அடிமையான பாண்டிச்சேரி, பிறகு டச், போர்த்துகீஸியர்கள் என்று தொடர்ந்து 1674 ஆம் ஆண்டு முதல் ஃபிரெஞ்ச் நாட்டுக்கு அடிமையானது.

சிறிதும் சம்பந்தமில்லாத மாஹே, யாணம், காரைக்காலுடன் இணைந்து பாண்டிச்சேரி – யூனியன் பிரதேசமாக உருமாறியது. 1954 ஆம் ஆண்டு சுதந்திர இந்தியாவின் அங்கமாகி 1964 ஆம் ஆண்டு யூனியன் பிரதேசமானது.

இந்திய நாட்டின் அங்கமாக மாறினாலும் கட்டிடங்கள் இன்றளவும் ஃபிரெஞ்ச் முறையில்தான் உள்ளன. காரைக்கால் மற்றும் புதுச்சேரி தமிழ்நாட்டின் எல்லையிலும், ஆந்திரா மற்றும் கேரளாவோடு யாணமும், மாஹேவும் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கின்றன.

இந்திய நாடு ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடிய பொழுது ஆங்கிலேயக் கொடுங்கோலாட்சியிலிருந்து தப்பிக்கப்பலர்

பாண்டிச்சேரிக்குத் தப்பி வந்ததுண்டு. அதில் அரவிந்தர், பாரதியார் போன்றவர்களின் சரித்திரம் இன்று பல விஷயங்களை நமக்குக் கூறுகின்றன.

1926 ஆம் ஆண்டு அரவிந்தர் ஆன்மீகக் குருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பாண்டிச்சேரியில் ஆசிரமத்தை நிறுவினார். பாரதியார் தினமும் சென்று அரவிந்தரைச் சந்தித்துப் பேசியது மட்டுமல்ல, இருவரும் பல காவியங்களைப் படைத்துள்ளனர்.

வங்காள விரிகுடாவின் அழகைப் பாண்டிச்சேரி, காரைக்காலிலும், மாஹே மற்றும் யாணத்தில் அரபிக் கடலின் அழகைக் காணலாம். 1739 இல் காரைக்கால், 1725இல் மாஹேவையும் 1731இல் யாணத்தையும் ஆங்கிலேயர்களிடமிருந்து ஃபிரான்சு ஆக்கிரமிப்பையும் கைப்பற்றியது.

காவேரி நதியின் வளம் காரைக்காலுக்கும் உண்டு என்பதாலும், பல ஆன்மீக நிகழ்வுகள் இங்கு நடந்ததாலும் காரைக்காலில் தமிழ்நாட்டின் சாயல் மிக அதிகமாக உள்ளது.

மாஹே பாண்டிச்சேரியின் நேர் எதிர்திசையில் மய்யாழி எனும் அரபிக் கடலோரம் உள்ள ஊராகும். இங்கு ஓடும் மாஹே நதி அரபிக் கடலில் கலக்கின்றது.

யாணம் கோதாவரி நதியின் கிழக்குப் பகுதியில் ஆந்திரப்பிரதேசத்தில் உள்ளது. இந்த மூன்று ஊர்களும் புதுச்சேரியின் கீழ் உள்ளது. இதன் மூலம் நீங்கள் இந்திய நாட்டின் வித்தியாசமான ஒற்றுமையைக் காணலாம். உலகில் இப்படிப்பட்ட நான்கு மூலைகளில் சிறுநகரங்கள் இணைந்து ஒரே யூனியன் பிரதேசமாக உள்ளதைக் காண இயலாது.

இந்த நான்கிலும் பிரெஞ்சு நாட்டுக் கலாச்சாரச் சாலைகள், கட்டிடங்களைக் காணலாம். அதே சமயம்

கோயில்களும் இந்த நான்கு ஊர்களில் மிகவும் பிரபலமானவை மற்றும் இந்திய பாரம்பரிய கட்டிடக் கலையைப் பறைசாற்றுகின்றன.

பிரெஞ்சு மொழியும் தமிழும், பிரெஞ்சு மொழியும் மராத்தியும், பிரெஞ்சு மொழியும் தெலுங்கும், பிரெஞ்சு மொழியும் மலையாளமுமாக வித்தியாசமான கலை ஒவ்வொரு ஊரிலும் உள்ளது.

பாண்டிச்சேரி பல்வேறு வகை சுற்றுலா வாசிகளை ஈர்த்தாலும், ஸ்ரீ அரவிந்தர் மற்றும் அன்னையை ஆராதிப்பவர்கள் தொடர்ந்து வருகின்றனர். காரைக்காலில் மாம்பழத் திருவிழா, 63 நாயன்மார்களில் பெண்மணியான காரைக்கால் அம்மையாருக்காக கூட்டம் அலைமோதுவதைக் காணலாம். யாணத்தில் “கல்யாணபுரம்” என்று அழைக்கப்படும் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் கோயிலுக்கு வரும் கூட்டம் பிரமிப்பை ஊட்டும். மாஹே ஓர் அற்புதமான சுற்றுலாத் தலமாகும்.

பாண்டிச்சேரியில் தமிழ்நாட்டு உணவும், பிரெஞ்சு வகை உணவுகளும் கிடைக்கின்றன. காரைக்கால் முழுமையாகத் தமிழ் நாட்டு உணவு வகைகளை கொண்டது. மாஹேவில் கேரள உணவு வகைகளும், பிரெஞ்சு உணவு வகைகளும் போட்டி போடுகின்றன. யாணத்தில் ஆந்திராவின் காரமும் பிரெஞ்சு உணவு வகைகளையும் ரசிக்கலாம்.

தங்கும் விடுதிகளும், சுற்றுலாத் துறையின் ஆர்வமும் பலரை இத்தலங்களுக்கு ஈர்க்கின்றன. மத்திய அரசும், பாண்டிச்சேரி அரசும், அருகில் உள்ள தமிழ்நாடு, கேரளம் மற்றும் ஆந்திர அரசுகளும் இணைந்து ஊர்களைச் சிறப்பான வகைகளில் முன்னேற்றி உள்ளது.

உ.தா : சென்னை – பாண்டி சாலை, மாஹே-கேரள படகு சவாரிகள், யாணம் – ஆந்திர அரசும் இணைந்த கௌதமி கோதாவரி நதி மற்றும் கடலை இணைக்கும் பாலம் என்று பலவற்றைக் கூறலாம்.

சுற்றுலாத்தலங்கள் – பாண்டிச்சேரி :

பாண்டிச்சேரி அருங்காட்சியகம், ஆயிமண்டபம், 19ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கலங்கரை விளக்கு, ஸ்ரீ அரவிந்தர் ஆஸ்ரமம், பாரதியார் இல்லம், மணக்குள விநாயகர் கோயில், வில்லனூரில் உள்ள திருக்காமீஸ்வரர் கோகிலாம்பிகை கோயில், புதிதாகக் கட்டப்பட்ட நவக்ரஹக் கோயில், பிரமிடு ஈஸ்வரன் கோயில், சர்ச்சுகள், மரக்காணத்தில உள்ள மசூதிகள், உப்பளங்கள் என்று இயற்கை அழகை வாரி வழங்கும் இடமாகும்.

**காரைக்கால் :**

திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் – அபிராமி கோயில், திருமீயச்சூர் ஸ்ரீ லலிதாம்பிகை ஸமேத மேகநாதர் திருக்கோயில், கூத்தனூர் சரஸ்வதி, திருநள்ளாறு சனீஸ்வரர், அன்னை வேளாங்கண்ணி சர்ச், நாகூர் தர்கா, தரங்கம்பாடி என்று காரைக்காலுக்கு அருகில் பல ஆன்மீகத் தலங்கள் உள்ளன.

காரைக்காலில் ஐம்புநாதர் சிவன் கோயில், காரைக்கால் அம்மையார் கோயில்கள் உள்ளன என்றாலும், பல கல்விக் கூடங்கள் பாண்டிச்சேரி போன்றேஇங்கும் உள்ளன.

**மாஹே :**

பிரெஞ்சு வகை கட்டிடங்கள், தாகூர் பார்க், செயிண்ட் தெரசாவின் கல்லறை போன்றவை உள்ளன. தலசேரியிலிருந்து சிறு படகுகள் மூலம் மாஹே சென்றடையலாம். இங்குள்ள தாழே அங்காடித் தெரு பிரெஞ்சு கட்டிடக் கலையைப் பறைசாற்றுகின்றது.

**யாணம் :**

கௌதமி மற்றும் கோதாவரி நதியின் பிரம்மாண்டத்தைக் காணலாம். பல பிரெஞ்சு கட்டிடங்கள் உள்ளன. முக்கியமான கோயிலாக ஸ்ரீ வெங்கடேஸ்வரர் கோயில் இருக்க, குழந்தை திருமணங்கள் தடை செய்யப்பட்ட காலகட்டத்தில் (சாரதா சட்டம்) பலர் இந்தக் கோயிலுக்கு வந்து திருமணங்கள் செய்ததால் இக்கோயிலைக் கல்யாணபுரம் கோயில் என்று அழைக்கின்றனர். இனி கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு சென்றால் மறவாமல் சிறு நகரங்களையும் காணத் தவறாதீர்கள்.

**வள்ளுவர் கூறுகிறார் :**

உறுதியான ஊக்கமுடையவன் இருக்கிற இடத்தை நாடி வழி விசாரித்துக் கொண்டு செல்வம் தானாகவே அவனிடம் போய்ச்சேரும்.

**ஸ்ரீமதி காந்தலக்ஷ்மி சந்திரமௌலி**


**Er. D.A. Devapaull**
Managing Director

**D.A. Devapaull**
DPT, Trainer

**STAR BUILDERS AND DEVELOPERS**
*... we build your dreams*

**STAR GYM & FITNESS CENTRE**

C-95, Thally Hudco
Hosur - 635 109.
starbuildershosur@gmail.com

#2, Renuga Devi Complex,
ESI Ring Road,
Muniswar Nagar,Hosur.

**We are specialised in :**
Industrial & Commercial Buildings
Residential Buildings, Apartments & Villas
Road Works & Layout
Approval Drawings & Structural Design
Star Earth Movers & Constriction Material Suppliers





- Weight Loss
- Weight Gain
- Fitness Training
- Strength Training
- TRX Training

**Cell : 94421 02057 / 70106 23102**

## மகாகவி

*“உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்*
*வாக்கினிலே ஒளி யுண்டாகும்*
*வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்*
*கவிப்பெருக்கும் மேவு மாயின்*
*பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்*
*விழிபெற்றுப் பதவி கொள்வார்,*
*தெள்ளுற்றதமிழமுதின் சுவைகண்டார்*
*இங்கமரர் சிறப்புக் கண்டார்”*

இந்தக் கவிதையின் முதல் இரண்டு வரிகளின் அர்த்தமே பாரதி, ஒரு படைப்பாளியின் உண்மைத் தன்மை அவனின் படைப்புகளில் மிளிரும். அதில் உச்சம் தொட்டவன் பாரதி. ஒரு சில இசை கோர்வைகளைக் கேட்டாலோ, சில காட்சிகளை பாத்தாலோ கண்ணில் நீர் வரும், ஆனால் பாரதியின் சில கவிதைகளை வாசிக்கும்போதே தைரியமும், வாஞ்சையும், அழுகையும், நேர்மறைசிந்தனையும் பெருகி வரும்.

தமிழ் படைப்புகள் மிக கடினமாக இருந்தால் மட்டும் தான் நல்ல கவிஞன் என்றஎண்ணம் இருந்த காலத்திலேயே புரட்சி செய்து அதை எளிதாக சாதாரண மக்களுக்கு புரியும்படி எடுத்துச்சென்றவன் அவன். இன்றும், எப்பொழுதும் தமிழ் இலக்கிய சுவையை அறிய முற்படும் எவருக்கும் ஒரு வாயிலாக, திறவுகோலாக இருப்பது பாரதியின் எழுத்து. கம்பனையும், வள்ளுவனையும், இளங்கோவையும் முன்னிறுத்தி எடுத்துச் சென்றவன்.

ரசனை, உணர்ச்சிகளை தாண்டி பாரதியை கொண்டாட செய்த, எனக்கு பிடித்த ஒரு சில வரிகளை இங்கே குறிப்பிட்டுள்ளேன்.

*"வல்லமை தாராயோ — இந்த*
*மாநிலம் பயனுறவாழ்வதற்கே!"*

*வல்லமை தாராயோ என சக்தியிடம் வேண்டுவது இந்த நாடு வளமாக இருப்பதற்காக மட்டுமே, தனக்காக எதையும் கேட்டதில்லை அவன்.*

*"ஜாதி மதங்களைப் பாரோம் — உயர்*
*ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்*
*வேதிய ராயினும் ஒன்றே- அன்றி*
*வேறு குலத்தின ராயினும் ஒன்றே"*

*வந்தேமாதரம் என்போம் என்ற பாடல் தான் பாரதி எழுதிய நாட்டுப்பற்று பாடல்களில் முதன்மையாக வெளிவந்தது. அந்த பாட்டின் தொடக்கத்தில் வரும் வரிகள் இவை. இன்று சமத்துவம் பற்றி பேசும் அனைவரும் போற்றவேண்டியவன் பாரதி.*

*"தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா - நின்னைத்*
*தீண்டுமின்பம் தோன்றுதடா நந்தலாலா"*

*எல்லாவற்றிலும் பரம்பொருளை காணும் சிந்தனை 39 வருடங்களே வாழ்ந்த ஒருவனுக்கு எவ்வாறு புலப்பட்டது? பாரதியின் தத்துவங்கள் எல்லாமே ஆச்சர்யம்!!*

*தொடரும்...*

**வெ.சிவசங்கரி**



## வருந்துகிறோம்

*வேதபாரதியின் ஆதரவாளர், மயிலாடுதுறை, திரு. K. சேகர் அவர்களின் தாயார்* **ஸ்ரீமதி.பிச்சம்மாள்,** *24.12.2024 அன்று இறைவனடி சேர்ந்தார். அவர்களின் ஆன்மா சாந்தியடைய ப்ரார்த்தனை செய்கிறோம். அம்மா அவர்களின் பிள்ளைகள் மற்றும் குடும்பத்திற்கு வேதபாரதியின் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.*

# புதுவையில் ஓர் குருவாயூர் ஸ்ரீ நவநீத கிருஷ்ணன் திருக்கோயில்

புதுவை நகர்ப்பகுதியில் சிறப்பும் பழமையும் மிக்கதாகப்பல திருக்கோயில்கள் விளங்குகின்றன. புதுச்சேரி வரலாற்று நாயகர், நாட்குறிப்பு வேந்தர் என்று போற்றப்பெற்ற துபாஷி ஸ்ரீ ஆனந்தரங்கம் பிள்ளையவர்கள் அமைத்து வழிபட்ட (வேணுகோபாலசாமி திருக்கோயில்) தற்போது ஸ்ரீ நவநீதகிருஷ்ணன் திருக்கோயில் முக்கிய திருக்கோயிலாக இன்றும் விளங்குகின்றது.

(ஆனந்த ரங்கப்) பிள்ளைத்தோட்டம் பகுதியில் இத்திருக்கோயில் இயற்கை எழிலுடன் திருக்கோயிலின் முன்புறம் திருக்குளம், அமைந்திட அழகுற விளங்குகின்றது. இங்குள்ள மூலவர் (மரகத) சாலக்ராமத்தால் ஆன அற்புத மூர்த்தியாக விளங்குகிறார். "கோபாலம் த்விபுஜம் க்ருஷ்ணம் – நவநீத கரத்துவயம் த்யாயேத் ப்ரஸன்ன வதனம் ஸர்வாபீஷ்ட பலப்ரதம் – எனும் ஸ்லோகத்திற்கேற்ப இருகரத்திலும் வெண்ணெயுடன் அமர்ந்த நிலையில் ஆதிசேஷனுள் வீற்றிருக்கிறார். முன்பே பழமைமிகுந்த (இத்திருக்கோயில் திருக்குளத்தில் கிடைத்தவர்) ஸ்ரீ தேவி பூமிதேவி ஸமேத ஸ்ரீநிவாஸர் விளங்குகிறார்.

சிலம்பு முதல் கலனணிந்தோர் செங்கண் குன்றம்
திகழ்ந்தது எனத் திருவுருவம் பன்றியாகி
இலங்குபுவி மடந்தைதனை இடந்துபுல்கி
எயிற்றிடை வைத்தருளிய எம் ஈசன்

என்றபடி அழகான ஸ்ரீஸுதர்சனவராஹ மூர்த்தி - கல்யாண வராஹராகக் காட்சிதருகிறார். இவரை வழிபட்டு பலர் திருமணத்தடை நீங்கப்பெற்று திருமணம் பாக்கியமும், பூமி - வீடு பாக்யம்பெறவும் அதன் வழியான சிக்கல்கள் நீங்கப்பெற்று அருள்பெற்றனர்.

அழகே உருவான ஸ்ரீ பால ராமர் - சீதாலக்ஷ்மணருடன் ஹனுமத் ஸமேதராய் எழுந்தருளியுள்ளார். அனைவரையும் கவர்ந்திருக்கும் அற்புத வடிவில் ஸ்ரீராஜகோபாலன் கன்று பசுவுடன் ஆயர் குல வேந்தனாகக் கோதையுடன் காட்சிதருகிறார். புதுச்சேரியின் குருவாயூராக விளங்கும் இத்திருக்கோயிலில் பலர் ப்ரார்த்தனை செய்து கொண்டு புத்ரபாக்யமும் – அன்ன ப்ராசனமும் செய்து அருள்பெறுகின்றனர். ஸ்ரீ வைணவ முறைப்படி நம்மாழ்வார் – ஸ்ரீ திருமங்கையாழ்வார் – ஸ்ரீமத் ராமானுஜர் – ஸ்ரீமத் மணவாளமாமுனிகளும் சேவை தருகின்றனர்.

ஸ்ரீ ஆனந்தரங்கப்பிள்ளை ஆதீனத்தைச்சேர்ந்த இத்திருக்கோயில், பிள்ளையவர்களின் குடும்பத்தினரின் பராமரிப்பில் இன்றும் சிறப்புற விளங்குகின்றது.

சித்திரை மாதம் ப்ரும்மோத்ஸவம், ஆடிப்பூர உத்ஸவம், ஆவணி ஸ்ரீஜெயந்தி உறியடி உத்ஸவம், புரட்டாசி பவித்ரோத்ஸவம், கார்த்திகை தீபம், மார்கழி வைகுண்ட ஏகாதசி, தனுர் மாத உத்ஸவம், தை - திருக்கல்யாண உத்ஸவம் – மாசி - செஞ்சி ரங்கநாதர் திருமண்டப உத்ஸவம் என்பன மிக விமரிசையாக நடைபெறுகிறது.

ஸ்ரீ அண்ணா முதன் முதலில் இத்திருக் கோயிலுக்கு ஸம்ப்ரோக்ஷணத்தின் போது விஜயம் செய்ததுடன் திருக்குளத்திற்கு விரஜா புஷ்கரணி என நாமகரணம் செய்து வைத்தார். பல்வேறு ஜீயர்களும் – காஞ்சி மடம் ஜெயேந்திரர் – ஸ்ரீ முரளிதரஸ்வாமிகள், முதலாகப்பற்பல ஆன்றோர்களும் தரிசித்த - திருக்கோயில் மேலும் அவர்கள் இங்குள்ள கோபாலனின் அழகில் மயங்கிச் செல்வது நாம் பெற்றபேறு......

புதுவை – குருவாயூர் – க்ருஷ்ணனை வழிபடுவோம்! அருள்பெறுவோம்!

**- ஆதிரையன்**

## புதுவை - சித்தர் பூமி

இன்றைக்கு பாண்டிச்சேரி, புதுச்சேரி என்றழைக்கப்படும் நகரம், பல வேத பண்டிதர்களையும், அக்ரஹாரங்களையும் தன்னகத்தே கொண்டது. சதாசர்வகாலம் வேத ஒலி எங்கும் நிறைந்திருந்தமையால் "வேதபுரி" என்றழைக்கப்பட்டது. இன்றைய புதுவையின் புராணப் பெயர்"வேதபுரி" என்பதே ஆகும்.

புதுவையின் நகர் மற்றும் கிராமப்பகுதிகளில் பலப்பல திருக்கோவில்கள் உள்ளன. அவற்றில் காந்தி வீதியிலுள்ள வேதபுரீஸ்வரர் திருக்கோயில், வரதராஜ பெருமாள் திருக்கோயில், வில்லியனூர் திருக்காளீஸ்வரர் திருக்கோயில், வீராம்பட்டணம் செங்கழுநீர் அம்மன் திருக்கோவில், யகூர் மூலநாதர் திருக்கோயில் ஆகியன மிக முக்கியமானவையாகும்.

இன்றைக்கும் வளமுடனும் நலமுடனும் புதுவை வாழ் பெரியோர்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை தொடர்வதற்கு இங்குள்ள சித்தர்களே காரணம். சித்தர்களுக்கு நடுவிலுள்ளது புதுவை. ஒவ்வொரு சித்தரைப் பற்றியும் விரிவாக எழுதுவதற்கான ஒரு தனி நூலையேப் படைக்க வேண்டும். எனவே, புதுவைப் பூமியின் சித்தர்களைக் காணலாம்! இருப்பிடத்தையும் காண்போம்!

1. "ஸ்ரீ தொள்ளைக்காது ஸ்வாமிகள்" – அருள்மிகு மணக்குள விநாயகர் தேவஸ்தானம், மூலவர் சந்நிதியின் பின்புறம் உறைகிறார்.
2. "ஸ்ரீ நாகலிங்க ஸ்வாமிகள்" – அம்பலத்தடையார் மடம் வீதி (கொசக்கடைத்தெரு), காளத்தீஸ்வரன் கோவில் பின்புறம் உறைகிறார்.
3. "ஸ்ரீ அக்கா ஸ்வாமிகள்" – முத்தியால்பேட்டை, கிழக்கு கடற்கரை சாலை அருகே வாழைக்குளம் பகுதியில் உறைகிறார்.
4. "ஸ்ரீ வேதாந்த ஸ்வாமிகள்" இவரை வேலாயுதம்

ஸ்வாமிகள் என்றும் அழைப்பர்". முத்தியால்பேட்டை வசந்த் நகரில் உறைகிறார். இவரது சீடர் ஸ்ரீ கங்காரன் "நந்தி" வடிவில் இவருக்கு எதிரே உள்ளார்.

5. ஸ்ரீ மண்ணுருட்டி ஸ்வாமிகள் புதுவை பழைய பேருந்து நிலையத்திற்கு அருகே தென்னஞ்சாலை கோவிந்தசாமி முதலியார் தோட்டத்தில் உறைகிறார்.
6. ஸ்ரீ குரு சித்தானந்த ஸ்வாமிகள் புதுச்சேரி புறவழிச் சாலையில் லாஸ்பேட்டை பகுதியில் "கருவடிக்குப்பம்" – குயில் தோப்பில்" உறைகிறார். மகாகவி பாரதி அதிகம் போற்றி வணங்கிய சித்தர் இவர்.
7. "ஸ்ரீ சக்திவேல் பரமானந்த ஸ்வாமிகள்" = முதலியார்பேட்டை, காராமணிக்குப்பம் ரயில்வே கேட் அருகில் அருளுகிறார்.
8. "ஸ்ரீ சிவ சடையப்பர் ஸ்வாமிகள்" – பேட்டையின் சத்திரம் (முருகா தியேட்டர் சிக்னல் அருகில்) வழுதாவூர் சாலையில் உறைகிறார்.
9. "ஸ்ரீ சுப்ரமண்ய அபினவ சச்சிதானந்த ஸ்வாமிகள் – எல்லைப் பிள்ளைச் சாவடி, (ஹவுஸிங் போர்டு சிக்னல் அருகில்) அருள்மிகு சாரதாம்பாள் கோவில் வளாகத்தில் உறைகிறார்.
10. "ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள்" – இவர் அருள்மிகு சாரதாம்பாள் கோவில் அருகில் உறைகிறார். என்றாலும், சரியான தகவல்கள் கிடைக்கவில்லை.
11. "ஸ்ரீ கதிர்வேல் ஸ்வாமிகள்" - சித்தன்குடி, பிருந்தாவன் 3வது குறுக்குத் தெருவில் இவரது உறைவிடம் உள்ளது.
12. "ஸ்ரீ கம்பளி ஞானதேசிக ஸ்வாமிகள்", - தட்டாஞ்சாவடி தொழிற்பேட்டை பின்புறம் ஜீவானந்தபுரத்தில் உறைகிறார்.
13. இவரது சமாதிக்கு பின்புறத்திலேயே "ஸ்ரீ பெரியவர்களுக்கு பெரியவர்" சமாதியும் உள்ளது.

14. *“ஸ்ரீ தேங்காய் ஸ்வாமிகள் – விழுப்புரம் செல்லும் பிரதான சாலையில் வில்லியனூருக்கு அருகே மின்துறைஅலுவலகம் எதிரில் உறைகிறார்.*
15. *ஸ்ரீ ராம் பரதேசி ஸ்வாமிகள் – வில்லியனூர் புறவழிச்சாலை துவங்கும் இடத்தில் பிரதான சாலையையொட்டி உறைகிறார்.*
16. *“ஸ்ரீ தட்சணாமூர்த்தி ஸ்வாமிகள்” – விழுப்புரம் பிரதான சாலையில் வில்லியனூர் கடந்து, தென்னல் ஸ்ரீ ஐயனார் கோவில் வடக்கே குளக்கரையில் உறைகிறார்.*
17. *ஸ்ரீ லக்ஷ்மண ஸ்வாமிகள் – புதுவை – சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் புத்துப்பட்டு, ஸ்ரீ ஐயனார் கோவிலுக்கு மேற்கே 1 கி.மீ. தொலைவில் உறைகிறார்.*
18. *ஸ்ரீ குருசாமி அம்மாள் ஸ்வாமிகள் – புதுவை – விழுப்புரம் நெடுஞ்சாலையில் அறியூர் பழைய சர்க்கரை ஆலை வளாகத்தையொட்டி உறைகிறார்.*
19. *“மஹான் படே சாயபு” – விழுப்புரம் நெடுஞ்சாலையில் கண்டமங்கலம் ரயில்வே லைன் ஒட்டிச் செல்லும் வழியில் சின்னபாபு சமுத்திரம் கிராமத்தில் உறைகிறார்.*
20. *“ஸ்ரீ அழகர் ஸ்வாமிகள்” – புதுவை, ஏம்பலத்திற்கு அருகே தென்னம்பாக்கம் கிராமம், ஸ்ரீ ஐயனார் கோவில் வளாகத்தில் உறைகிறார்.*
21. *“ஸ்ரீ சிவப்ரகாச ஸ்வாமிகள்”- புதுவையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் நல்லாத்தூர் கிராமம் சிவாலயம் அருகில் உறைகிறார்.*
22. *“ஸ்ரீ வண்ணார பரதேசி ஸ்வாமிகள்” – முருங்கப்பாக்கம் – வில்லியனூர் சாலையில் ஒதியப்பட்டில் உறைகிறார்.*

*இவர்களோடு அரவிந்தரும், அன்னையும் புதுவை நகரை அருள்கின்றனர்.*

**-ஆதிரையன்.**

## இராமாயணம் தரும் படிப்பினை

சென்றமாத தொடர்ச்சி...

இராமபிரானின் மகிமையை வார்த்தையால் கூறமுடியாது என்பது உண்மை என்று கூறி சம்பாதி மீண்டும் பறக்க ஆரம்பித்தது.

கடினமான / முடியாத எந்த காரியத்தையும் – ராம நாமம் என்றவார்த்தை, ஐயம், கைங்கரியம் கட்டாயம் நிறைவேற்றும் என்பது உறுதி. அது இன்றும் கூட மக்கள் மனதில் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்கின்றது. அவநம்பிக்கையுடன் இருந்த அங்கதனுக்கு சம்பாதி பேச்சு நம்பிக்கை ஊட்டியது. பயம், அதைரியத்தை நீக்கினால் வாழ்க்கையில் சாதிக்க முடியாதது என்பது எதுவும் இல்லை. தோல்வி மனப்பான்மை ஏற்பட்டால் தோல்விதான் கிடைக்கும்.

இருக்கும் வானரர்களிடம் ஹனுமான் தான் கடலைத் தாண்ட முடியும். சாதிக்கும் வல்லமையுடையவன் ஹனுமன் என்று ஜாம்பவான் கூற ஹனுமன் தான் கடல் தாண்டிச் செல்ல வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

சிறு வயதில் ஏற்பட்ட சாபம் காரணமாக ஹனுமன் தனது பலம், திறமையை மறந்திருந்தார். ஜாம்பவான் மூலம் அது தூண்டப்பட்டு புத்துணர்ச்சியைப் பெறுகிறான் ஹனுமன். வேதத்தின் பொருள் உணர்ந்தவன். உலகின் அழிவு காலத்தையும் கடந்து ஆயுள் உடையவன் அடுத்து உலகைப் படைக்கும் பிரம்மா தாங்கள் தான் என்று ஜாம்பவான் கூறினார். நற்பண்புகள், ஒழுக்கம், தாச பக்தியுடன் இருப்பதால் தான் ஹனுமனுக்கு உயர்வு.

ஜாம்பவான் தன்னைப் பற்றிக் கூறிய பெருமைகளை அடக்கத்துடன் ஏற்றுக் கொண்டார் ஹனுமான். பிறர் புகழ்வதை அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். பிறகு ஜாம்பவான், அங்கதன் மற்றும் வானரர்களிடம் வணங்கி, விடை பெற்றுக்

கொண்ட ஹனுமன், இராமபிரானின் கருணையும், உங்கள் ஆசியும் எனக்கு இரு சிறகுகள் அதைத் துணையாகக் கொண்டு கடலைத்தாண்டி எம்பிராட்டி சீதையை கண்டு திரும்புவேன் என்று கூறி கடலைக் கடப்பதற்கு ஆயத்தமானான்.

## சுந்தர காண்டம்

இந்தக் காண்டத்தில் ஹனுமன் தான் கதாநாயகன். ஹனுமன் சிறிய திருவடி என்று அன்போடு சொல்வார்கள். கருடன் பெரிய திருவடி, ஹனுமனுக்கு சுந்தரன் என்ற பெயரும் உண்டு. இலங்கை இயற்கை எழில் கொஞ்சும் அழகிய நகரம். அதன் அழகு இந்தக் காண்டத்தில் வர்ணிக்கப்படுகின்றது. லோகமாதா, ஜகன்மாதா சீதையாக அவதரித்து இராவணனால் அபகரிக்கப்பட்டு அவள் அசோக வனத்தில் படும் துன்பம் இந்தக் காண்டத்தில் வர்ணிக்கப்பட்டு அவளுக்கு தீர்வும் கிடைக்கும் உயரிய சம்பவத்தை எடுத்துக்கூறுவது இந்தக் காண்டம். சுந்தரம் என்றாலே அழகு, அமைதி, நிம்மதி.

ஹனுமன் சிறந்த பலவான். ஆனால் ரிஷி, முனிவர்களின் சாபத்தினால் தன்நிலை உணராதவராக இருந்திருக்கின்றான். சிறிய வயதில் செய்த தவறுகள், அடுத்தவர்களை பாதிக்கக் கூடியதாக இருந்ததால் ஹனுமனுக்கு இந்த நிலை ஏற்பட்டது. ஜாம்பவான் எடுத்துக் கூறிய பிறகுதான் தனது உண்மை நிலையை உணர்ந்து இலங்கை புறப்பட தயாராகிறான். என்னதான ஒருவன் பலம், சக்தி கொண்டிருந்தாலும் அது நல்லவர்கள், நல்ல காரியங்களுக்காகத்தான் பயன்படுத்த வேண்டும். உலகிற்கு நல்லது செய்யும் ரிஷி, முனிவர்கள் மீது பயன்படுத்தக்கூடாது. அவர்களைத் துன்புறுத்தும் செயல்களில் ஈடுபடக்கூடாது.

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**

# வியப்பூட்டும் விருஜ் பூமி யாத்திரை

## மதுரா விருந்தாவனில் ஸ்ரீ ராதாகிருஷ்ணமயம் – 1

**(Dr. ஷ்யாமா ஸ்வாமிநாதன்)**

*ராதே கிருஷ்ணா! எல்லாம் இறைசெயல் !*

*சற்றும் நினைத்திருக்கவில்லை அயோத்தி குழந்தை ஸ்ரீ ராமரின் தரிசனத்தைத் தொடர்ந்து, வியப்பூட்டும் விருஜ் பூமி யாத்திரையை மேற்கொண்டு, ஸ்ரீ ராதாகிருஷ்ண மயமாகத்திகழும் மதுரா விருந்தாவனில் எட்டு நாட்கள் வசித்து, அனுபவித்த ஸ்ரீ ராதாகிருஷ்ணானுபாவத்தை நான் தொடராக எழுதுவேன் என்று. இது என் குருமார்களின் ஆசியால், ஜகத்குருவான ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாளின் கருணையால், கிடைத்த பாக்கியம் என்றே கருதுகிறேன்.*



*அம்பாள் உபாசகியாக மட்டுமே இருந்துவந்த என் வாழ்க்கையில் கடந்த சில ஆண்டுகளாகவே ஸ்ரீ ராதாகிருஷ்ணரின் ஆதிக்கம் அதிகமாகவே இருந்துவருகிறது என்பதை நான் உணர்ந்தே இருக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் தவழும் குட்டிக் கிருஷ்ணராக உள்நுழைந்தவர். நாட்கள் போகப் போக ஸ்ரீ ரங்கநாதராய், ஸ்ரீ அனந்த பத்மநாபஸ்வாமியாய், உப்பிலியப்பனாய், துவாரகா தீசனாய், பூரி ஸ்ரீ ஜகந்நாதராய், தென்னாங்கூர் ஸ்ரீ பாண்டுரங்கனாய் விதவிதமாக என் உள்ளம் மற்றும் இல்லம் எங்கும் தானாகவே எழுந்தருளி என்னை வியக்க வைத்துவிட்டார் சாட்ஷாத் ஸ்ரீ நாராயணராகிய ஸ்ரீ கிருஷ்ணன்.*

*என்னைச் சுற்றி என்னவோ நடக்கிறது என்று*

உணர ஆரம்பித்தேன். 'உன் வாழ்க்கை இனி என் கையில்' என்று அமானுஷ்யமாய் சிறு சிறு விளையாடல்களைச் செய்து, என் அருகே அவரின் இருப்பை எனக்கு உணரவைத்தார் ஸ்ரீ கிருஷ்ணன். இந்த என் உணர்வை நான் பெரிதும் மதிக்கும் ஒரு வேத பண்டிதரிடம் பகிர்ந்து கொண்டு, நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். அவர், எங்கள் இல்லத்தில் இருந்த அம்பாள் திருவுருவப்படத்தைச் சுட்டிக்காட்டி, "இதோ இந்த லலிதாபரமேஸ்வரிதான் உன்னை ஸ்ரீ நாராயணரை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கிறாள். எல்லோரும் கடைசில விஷ்ணுபாதத்துலதான் சரணடையணும். தைரியமா அவள் காட்றவழில நடந்து போயிண்டே இரு. எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்'' என்றார்.

நான் சற்றேதெளிந்தேன். இதனைத் தொடர்ந்து **சோம்நாத்-துவாரகா-விராவல்யாத்திரை, பூரி ஜகந்நாத் யாத்திரை** மற்றும் திடீர் திடீரென்று தென்னாங்கூர் ஸ்ரீ ரகுமாயி சமேத ஸ்ரீ பாண்டுரங்கர் தரிசனம் என்று தொடர்ந்து, இப்போது ஸ்ரீ ராதாகிருஷ்ண ஜென்மஸ்தான் அடங்கிய **வியக்கவைக்கும் விருஜ்பூமி யாத்திரை** சாத்தியமாகி உள்ளது. இது எதையுமே நான் திட்டமிடவில்லை. எல்லாம் அவன் அருளாலே நிகழ்ந்தது. என்னையும் தங்களில் ஒருத்தியாக இணைத்துக் கொண்டு கை பிடித்து அழைத்துச் சென்றஅனைத்து ஸ்ரீ ராதாகிருஷ்ண பக்தர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு (2024) க்குள் மதுரா விருந்தாவன் யாத்திரை செய்வதற்கு ஸ்ரீ ராதாகிருஷ்ணனை உளமாறப் பிரார்த்தனை செய்து கொண்டு தானிருந்தேன். ஆனால் அது எப்படி, யாரால், யாருடன் சாத்தியமாகும் என்று புரியவில்லை. சுற்றம், நட்பு,

அக்கம், பக்கம் என்று கேட்டுப்பார்த்தேன். பலனில்லை. கிருஷ்ணா என்று இரு கைகளையும் உயர்த்திவிட்டு அமைதியாகிவிட்டேன். 'எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான். இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்'' என்று பாரதியார் பாடியது போலவே, தக்ஷிணபண்டரிபுரம் என்று அழைக்கப்படும் **கோவிந்தபுரம் ஸ்ரீ ருக்மிணிவிட்டல் சமஸ்தானத்தின்** விருந்தாவன் யாத்திரைக்கான அறிவிப்பு வாட்ஸ்அப் மூலம் கண்களில்பட்டது. ஸ்ரீ ஸ்ரீ



கிருஷ்ணனே அழைப்பினை எனக்கு அனுப்பிவைத்தது போல் மனம் பூரித்தேன். அவர்கள் மூலமே சென்னையில் **திரு. பாரதி கணேஷ் - திருமதி. சரஸ்வதி** தம்பதிகளின் அறிமுகமும் கிடைத்தது. பக்த தம்பதிகள் இருவரும், என்னை அன்புடன் 'அக்கா, அக்கா'' என்று அழைத்துக்கொண்டே, விருஜ் பூமியில்,அனைத்து தரிசனங்களையும் அக்கறையுடன் கைபிடித்து அழைத்துச்சென்று செய்துவைத்தனர். இது ராதாகிருஷ்ணனின் அபார கருணையேயன்றி வேறில்லை. அந்த பக்த தம்பதிகளுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்.

கோவிந்தபுரம் ஸ்ரீ ருக்மணிவிட்டல் சமஸ்தான குருஜி ஸ்ரீ விட்டல் தாஸ் மகாராஜ் அவரின் புதல்வர் ஸ்ரீநாத்ஜி ஆகியோர் தலைமையில் சுமார் 70 - 75 யாத்ரீகர்களைக் கொண்டிருந்த இந்த மதுரா - விருந்தாவன் யாத்திரையை, தங்குமிடம், வேளா வேளைக்கு உணவு, உள் பயணங்களுக்கான வாகனங்கள் என்று அனைத்து வசதிகளுடன், ஆங்காங்கே ஸ்ரீ நாத்ஜி அவர்களின் ஷேத்திர மகிமை

பற்றிய உபன்யாசங்கள், நாமாவளிகள், அபங்கங்கள் என்று வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். நாமாக ஏற்பாடு செய்துகொண்டு சென்றிருந்தால் ஏதோ ஊட்டி, கொடைக்கானலை சுற்றிப்பார்ப்பது போல் பார்த்திருப்போம். குரு ஸ்ரீ விட்டல் தாஸ்மகராஜ் அவர்களின் வழிநடத்தலில் இந்த யாத்திரை மேற்கொண்டதால், இந்த விருஜ் பூமி யாத்திரை, துவாபரயுகத்தில் ஸ்ரீ ராதாகிருஷ்ணருடன் கோபகோபிகைகளாகவே வாழ்ந்தது போன்றஉணர்வைத் தந்தது என்றால் மிகையில்லை.

இந்த ஸ்ரீ ராதாகிருஷ்ண அனுபவத்தைநான் உணர்வதற்கான வாய்ப்பினை நல்கிய குருஜி அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு, விருஜ் பூமியில் ஸ்ரீ ராதாகிருஷ்ணரின் உலகத்திற்குள், நாங்கள் அனுபவித்த ஸ்ரீ ராதாகிருஷ்ணமய யாத்திரை அனுபவங்களைத் தொடர்ந்து உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். ராதே கிருஷ்ணா!

இனி விருஜ் பூமியில் பயணிப்போம்...


**வேதபாரதி செய்திகள் புத்தக வங்கி கணக்கு எண்கள் விபரம்**

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.200

10 வருட சந்தா ரூ.1500

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**

**City Union Bank, Velachery Branch**

**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**

**80G Approved**

# சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில் (4)

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

*சென்றமாத தொடர்ச்சி...*

*ஒவ்வொரு தமிழ் மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமையில் பிரகார உற்சவத்துடன் ஊஞ்சல் உற்சவமும் நடைபெறும். பிரதோஷம், கார்த்திகை சஷ்டி, அஷ்டமி போன்றவையும் விழா நாட்கள்.*

*சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமியும், வசந்த உற்சவமும், வைகாசியில் விசாகம், லட்சதீபம், திருஞான சம்பந்தர் விழா 10 நாள், ஆனி மாதத்தில் 1008 சங்காபிஷேகம், பவித்ரோத்சவம்; ஆனித்திருமஞ்சனம்; ஆவணியில் விநாயக சதுர்த்தி; லட்சார்ச்சனை, திருவோண நாளில் ஸ்ரீ ராமர் கபாலீஸ்வரரை வழிபட்டு அமுதூட்டிய ஐதீஹவிழா கார்த்திகை மாதத்தில் சோமவாரங்கள்; திருக்கார்த்திகை தீபம்; சுவாமி லட்சார்ச்சனை; மார்கழியில் திருப்பள்ளி எழுச்சிவிழா; திருவாதிரை விழா 10 நாள்; தை மாதத்தில் அம்பாள் லெட்சார்ச்சனை; தெப்பவிழா 3 நாள்கள்; மாசி மாதத்தில் மகாசிவராத்திரி; மாசிமக கடல்கட்டு விழா முதலியன நடைபெறுகின்றன.*

*பங்குனி மாதம் கார்த்திகையில் அனுக்ஞையுடன் ஆண்டுப் பெருந்திருவிழா தொடங்குகிறது.*

*ஸ்ரீ கோலவிழி அம்மனை வழிபட்டு, மிருதசங்கிரிஹனம் அங்குரார்ப்பணம் நடைபெற்று ஸ்ரீ நர்த்தன விநாயகர் வெள்ளி மூஷிகவாகனத்தில் உலா நடைபெறும்.*

*முதல் நாள் : காலை கொடியேற்றம், இரவு அம்பாள் மயில் வடிவில் சிவபூஜைக்காட்டி.*

*இரண்டாம் நாள் : காலை சூரிய பிரபையிலும், இரவு பூத, பூதகி வாகனத்தில் உலா.*

*நான்காம் நாள் : புருஷாமிருகம் & சிம்மவாகனக்காட்சி;*

இரவு நாகம் & காமதேனு வாகனக்காட்சி.

ஐந்தாம் நாள் : காலை விமான சேவை; இரவு வெள்ளி ரிஷபசேவை.

ஆறாம் நாள் : காலை பல்லக்கு சேவை; இரவு யானை வாகனக்காட்சி.

ஏழாம் நாள் : காலை தேரோட்டம்.

எட்டாம் நாள் : பிற்பகல் அறுபத்து மூவர் திருவிழா இரவு ஸ்ரீ சந்திரசேகரர் பாரிவேட்டை விழா.

ஒன்பதாம் நாள் : காலை பஞ்சமூர்த்தி விழா மாலை பிக்ஷாடனர் புறப்பாடு.

பத்தாம் நாள் : காலை நடராஜர் புறப்பாடு மாலை மயில் உருவில் சிவபூஜை. இரவு 7.00 மணிக்குத் திருக்கல்யாணம். கொடியிறக்கம் சண்டிகேஸ்வரர் திருவிழா.

பதினொன்றாம் நாள் : காலை உமா மகேஸ்வரர் தரிசனம்; மாலை பாண்டம் பரிவிழா.

12-ம் நாள் : விடையாற்றி, உற்சவ சாந்தி.

பாபநாசம் சிவன் ஸ்ரீ கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் மீது பல கீர்த்தனைகள் பாடியுள்ளார்.

நோய் நீக்கம் செய்து, திருமணப்பேறு, மகப்பேறு வரம் அளித்துச் சகல ஐஸ்வர்யங்களும் அருளும் சென்னை திருமயிலை ஸ்ரீ கற்பகாம்பாள் உடனாய ஸ்ரீ கபாலீஸ்வரரை வணங்கி நல்லருள் பெறுவோமாக.

குயில் ஒத்து இருள்குஞ்சி கொக்கொத்து இருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே - மயிலைத்
திருப் புன்னையங்கானல் சிந்தியாயாகில்
இருப்பின்னை அங்கான் திளைத்து.

(க்ஷேத்திர திருவெண்பா)

மயிலையே கயிலை! கயிலையே மயிலை!

ஓம் நமசிவாய.

முற்றும்.

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- ❖ Breast Pumps
- ❖ Blood Glucose Meters
- ❖ BP Meters
- ❖ Alpha Beds
- ❖ Adult Diapers
- ❖ Under Pads
- ❖ Wheel Chairs
- ❖ Physio Products
- ❖ Home Sleep Study
- ❖ Oxygen Concentrator
- ❖ CPAP / Bi Pap
- ❖ Pulse Oxymeters
- ❖ Nebuliser
- ❖ Morning Walker
- ❖ Weighing Scale
- ❖ Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940



||Shri Chowdeshwari Prasanna||

**SHREE SHANKARA THAPOVANAM**

**(Shree Chandramouleswara Seva & Trust)**

Plot No.596, VGP Jayanagar, Onnalavadi, Thorapalli Panchayat, Rayakotta Road, HOSUR – 635126.

**MONTHLY SEVA**

1. Pradosha Pooja
2. Shukla Panchami Pooja
3. Ashlesha Abhishekam
4. Sankasthahara Chatrurthi
5. Go Pooja on Fridays

**GAU POSHANA SEVA**

1 Cow feeding for day rs.145/-

10 cows for day Rs.1,450/-

1 Cow for month Rs.4350/-

10 Cows for month Rs.43,500/-



**Life Time One day Pooja for Every year (Life Membership) Rs.5001/-**



*Devotees are requesting to contribute for Gou Seva*

**For Online Payments**

A/c Shree Chandramouleswara Seva & Trust, Inidan Bank,
A/c No.6189034010 IFSC Code : IDIB000B142
Branch : Hosur

ஹரி ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

**வேதபாரதி**

**யோகா வகுப்புகள் (30 நிமிடங்கள்)**

**வாரம் 2 நாட்கள் by Online**

செவ்வாய், வியாழன் – காலை 6.00 மணி

சனி, ஞாயிறு – காலை 6.00 மணி

ஆசிரியர் : யோகாச்சாரியார் **ஸ்ரீ J. சந்திரசேகர் ஜி**

திருச்சி

யோகாவில் இணைவோம் உடல் மனம் புத்துணர்ச்சி பெறுவோம்

தொடர்புக்கு :

**9443495950 / 9443453053**

**குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும்**

**ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**

சிறியவர்களுக்கு ஸ்ரீ குரு பாதுகா ஸ்தோத்திரம்

பெரியவர்களுக்கு ஸ்ரீ வேங்கடேச கராவலம்பம்

*ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,*

*ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை*

தொடர்புக்கு : **9443489129**

*ஸ்ரீ குருப்யோ நம:*
*ஸ்ரீ மாத்ருப்யோ நம:*
*ஓம் நமோ பகவத்யை ஸச்சிதாநந்த ரூபிண்யை ஸ்வாத்மை பரதேவதா லலிதா*



# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம கோடி அர்ச்சனை வைபவம் 2025

*சிவ: ஸக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்*
*ந சேதேவம் தேவோ ந கலு குஸர: ஸபந்திதுமபி*
*அதஸ்-த்வா மாராத்யாம் ஹரி ஹர விரிஞ்சாதிபி-ரபி*
*ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதமக்ருத புண்ய: ப்ரபவதி*
*ஸௌந்தர்யலஹரி – ஆதிசங்கர்*

*பராசக்தியான லோகமாதா ஸ்ரீ அம்பாளின் திருவருளால்தான் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், ஸதாசிவன், அஷ்டதிக்பாலகர்கள் முதலான சகல ஜீவராசிகளும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அனுக்ரஹித்தல் போன்ற சுபகார்யங்கள் செயல்படுகின்றன. பலரும் சுகமாய் இருக்கவே விரும்புகிறார்கள். அதற்கு "கிம் கரணீயம்'' என்ன செய்ய வேண்டும் எனில் "சரணயுகளம் அம்பாயா''. ஸ்ரீ அம்பாளின் பாதகமலங்களை பிடித்து சரணடைவதே சிறந்த வழி. இஹத்திலும் பரத்திலும் சுகமும் மோக்ஷமும் அளிக்கக்கூடிய பரதேவதையான அம்பாளுக்கு பகவத் க்ருபையை முன்னிட்டும் ஸ்ரீ ஆச்சார்யாள் அனுக்கிரஹத்துடனும் 2001, 2013ஐ தொடர்ந்து மூன்றாவது முறையாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம கோடி அர்ச்சனையை லோக க்ஷேமார்த்தமாக நிகழும் குரோதி வருஷம் தை மாதம் 6ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை (19.01.2025) முதல் தொடர்ச்சியாக காலை 8.45 முதல் 10.30 மணி வரை நடக்க இருக்கிற யஇந்த அர்ச்சனை வைபவத்தில் சுவாசினிகளும் ஆன்மீக அன்பர்கள் பலரும் பங்கு பெற்று இயன்றஅளவு பொருளுதவி பண உதவிகளை செய்து எல்லாம் வல்ல அம்பாளின் அனுகிரஹத்திற்கு பாத்திரர்கள் ஆகும்படி அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.*

**இடம் : ஸ்ரீ தேவி கருமாரி த்ரிபுரசுந்தரி ஆலயம்**
*சாமியார் தோட்டத் தெரு, அசோக்நகர், சென்னை – 83*

*மேற்கு மாம்பலம்*
*சென்னை – 600033.*

**ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம மண்டலி**

*போன் :* **9445073431 / 99406 78902**

*ஹரி : ஓம்*

# வேதபாரதி வித்யார்த்திகளின் மிகப்பெரிய சாதனை

# இரண்டு மணி நேரம் 40 மணித்துளிகள் ஏகாதச ருத்ர பாராயணம்

*நமது வேதபாரதி வேத வகுப்பில் ஆன்லைன் மூலம் பயிலும் 11 வித்யார்த்திகள் 9.12.2024, கார்த்திகை சோமவாரத்தன்று தினமும் நடைபெறும் வேத வகுப்பில் ருத்ரம் 11 அனுவாகமும் ஒரு சமகமும், ஒவ்வொருவரும் தனித்தனியாக கூறி இரண்டு மணி நேரம் 40 மணித்துளிகளில் ஏகாதச ருத்ர பாராயணத்தை முடித்தனர். இதுவரை ஆன்லைன் வேத வகுப்பில் இத்தகைய சாதனையை யாரும் எங்கும் செய்ததில்லை. அனைவரும் ஒரே இடத்தில் ஒன்றாக அமர்ந்து வேதபாராயணம் செல்வது என்பது எளிது. ஆனால் ஒவ்வொருவரும் தனித்தனியாக தங்களது இல்லத்தில் அமர்ந்து கொண்டு zoom லிங்க் மூலமாக 11 அனுவாகத்தையும் ஒரு சமகத்தையும் பாராமல் கூறியுள்ளனர். நமது வேதபாரதியில் வேதம் பயிலும் மூன்று மற்றும் ஐந்தாம் குழுமத்தில் உள்ள வித்யார்த்திகள், வாத்தியார் கல்யாணபுரம் ஸ்ரீ சீனிவாசன் கனபாடிகள் மூலமாக இந்த சாதனையை செய்துள்ளனர். நமது மகா குருஜி ஸ்ரீ ஸ்ரீ கைலாச கனபாடிகள் கடைசி 20 நிமிட நேரம் ஆன்லைன் வகுப்பில் கலந்து கொண்ட வித்யார்த்திகள் கூறும் ருத்ர பாராயணத்தை பார்த்து மகிழ்ந்து அனைவரையும் ஆசீர்வதித்தார்கள்.*

*அந்த குழுவிற்கு வேதபாரதி தனது பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறது.*

*ஆசிரியர்.*

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

## குத்தாலம் சுபிக்ஷா ஹிந்தி வித்யாலயா சார்பில் நடைபெற்ற மார்கழி வீதி பஜனை




## 01.01.2025 புதுவை மார்கழி பஜனை



## ப்ரும்ஹஸ்ரீ டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் சதாபிஷேக துவக்கவிழா



HARI OM



# VEDABHARATHI KOTI GAYATHRI JAPA YAGNAM 2025

**Date: 26-1-2025, Sunday**

***Venue :***


**SRI KAMAKOTI KAMAKSHI AMMAN SANNIDHI**

***Salem***

**For Reg. :**

**97155 55744**
**94432 44664**

[Sandhyavandanam, Anushtanam - Must
Smartha, Vaishnava, Madva, Sivacharyars only]


CITY UNION BANK
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple-seamless-secure
DRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26 
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th January 2025

மரம் வளர்ப்போம் இயற்கையை காப்போம்



நம் தலைமுறை நம்மை போற்றட்டும்




To

---

---

---

---

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.